
# ஆன்மீக வலம்

தை 1997 இதழ் 1



# WINGS WORLDWIDE TRAVELS

**77, HOE STREET,**
**WALTHAMSTOW**
**LONDON E17 4SA**

* ஆசிய, ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்கான விமானச் சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
* புட்டபர்த்தி உட்பட தென்னிந்தியாவின் புண்ணிய ஸ்தலங்களுக்கான புனித யாத்திரை ஒழுங்கு செய்து தரப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

WINGS WORLDWIDE TRAVELS

**Phone: 0181 521 6216**
**Phone/Fax: 0181 521 6456**

# அன்புமிக்க ஆன்மீக நெஞ்சங்களோடு ஒரு சில நிமிடம்

ஆன்மீக வலம் என்னும் பெயர் தாங்கி எமது முதலாவது இதழ் வெளி வருகின்றது. உலக நாடுகளிலும் உள்ள அனைத்து ஆன்மீக உறவை பலப்படுத்துவது மட்டும் மல்லாது இளைய தலைமுறையினரையும் நிலையான ஆன்மீக பாதைக்குள் கவனத்தை ஈர்க்க வைப்பதோடும். எமது கலை, கலாச்சாரத்தின் புனித தன்மைகளை உலக நாடுகளிலுள்ள அதாவது சிறிய வயதில் இருந்து புலம் பெயர்ந்த நாடுகளிலும் வளர்ந்து வரும் இளைய தலைமுறையினருக்கு புரிய வைப்பதும் ஒரு நல்ல புத்தகம் திறந்து கொள்வதால் இளைய தலைமுறையினரின் இதயத்திலுள்ள நல்ல சிந்தனைகளை உருவாக்கும். சிந்திக்க தூண்டும் சிந்திப்பதால் நல்ல செயற்பாடுகள் உருவாகும் நல்ல செயற்பாடுகள் உருவாகுவதால் சிறைக்கதவுகள் மூடப்படும். நல்ல வழிகாட்டிகள் நாளை உருவாகுவார்கள் இதனால் எமக்கு பெருமை தாய் தந்தையோருக்கு பெருமை எமது தாய் மண்ணுக்கு பெருமை இறைவனுக்கு பெருமை ஆகவே சின்னச்சிறுவர்களின் சிறிய முயற்சிக்கு இது எமது இலட்சியத்தை அடைவதற்கு அனைவரிடம் இருந்து அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

அன்பு மிக்க ஆன்மீக நெஞ்சங்களே!

இளைய தலைமுறையினரை சிந்திக்க வைக்கும் பக்திக்கதைகள், புனித தலங்களின் வரலாறுகள் மற்றும் எமக்கெலாம் நல்லதொரு வழிகாட்டியாக வாழ்ந்த மகான்களின் வரலாறுகள் உணவு விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாட்டு விதிகள். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் இளைய தலைமுறையினருக்கு பெருமைமிக்க பெரியவர்கள் கூறும் அறிவுரைகள் இது சம்பந்தப்பட்ட ஆக்கங்களை உங்களிடமிருந்து சிறியவர்களாகிய நாம் எதிர்பார்க்கின்றோம்.

தெய்வீகத் திருவுருவங்களே! உங்கள் ஒவ்வொருவருக்கும் நிகழும் தெய்வீக அற்புதங்களை நாம் எதிர்பார்க்கவில்லை. அவற்றை நாம் பிரசுரிக்கமாட்டோம் என்பதையும் மிகவும் பணிவாக தெரிவித்து கொள்கின்றோம். நீங்கள் தரும் ஆக்கங்களை உங்கள் அனுசரணையோடு மாற்றி அமைக்கவோ அல்லது பகுதி பகுதியாக பிரசுரிக்கவோ அல்லது பிரசுரிக்க மறுப்பதற்கோ சின்னஞ் சிறியவர்களாகிய

எமக்கு உரிமை உண்டு. பெருமைமிக்க பெரியவர்களாகிய நீங்கள் இதற்கு பரிபூரணமாக ஒத்துழைப்பீர்கள் என நம்புகின்றோம்.

ஆன்மீக வலம் எனும் பெயரை இவ்விதழுக்கு சூட்டியதோடு மட்டும் அல்லாது அட்டைப்படம் போடுதற்கும் உதவியளித்த எனது ஆன்மீக நண்பன் அமலன் அவர்களுக்கும் மனம் தளரவிடாது எமது முயற்சிக்கு உற்சாகம் ஊட்டிய முத்தமிழ் ஆசிரியர் ரவிஅண்ணா அவர்களுக்கும் அவரது சகோதரி கலா அவர்களுக்கும் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட ஆக்கங்களை உரிய நேரத்தில் தந்து உதவிய அன்புமிக்க ஆன்மீக நெஞ்சங்களுக்கும் ஆன்மீக விடயங்களடங்கிய பலன் தரக்கூடிய பலவிதமான நல்ல புத்தகங்களை எனக்கு உரிய நேரத்தில் தந்த உதவிய எனது தாயாருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

ஆன்மீக பாதையில் தன்னை பலம் உள்ளவராக மாற்றியது மட்டும் மல்லாது ஆயுள்வேத டாக்டராகவும் (D.A.M) தன்னை உருவாக்கி அதன் பலன்களை தான் பிறந்த தாயக மண்ணு க்கே அர்ப்பணித்து பல இன்னல்களுக்கு மத்தியிலும் உறுதியோடு மனம் தளராது தாயக மண்ணு க்கு சேவை செய்து இறைவனடி சேர்ந்த எனது தந்தையார் கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ஆன்மீக வலம் எனும் இவ்விதழை அர்ப்பணம் செய்கின்றேன்.

இப்படிக்கு
என்றும் உங்களது அன்புக்கும், ஆதரவுக்கும் கட்டுப்பட்ட

**க.பிரகாஷ்**
11, Violet Road
Walthamstow
London E17 8HZ
Tel: 0956 545 946
Fax: 0181 923 6643
E:Mail: ex 5091@9mw. a.c.UK

Amalan 0181 520 3056

0956 375526

# ஆன்மீகம் என்றால் என்ன?

ஒருவன் தன்னைத் தானே அறிவது தன்னைத் தானே உணர்வது தன்னைத் தானே புரிந்து கொள்வது ஆன்மீகம். ஆன்மீகம் என்ற பயிர் செழித்து வளர்ந்தால் களைகளும் கூடவே தோன்றும். பயிரை பாதுகாப்பதோடு களைகளையும் அழிக்க வேண்டும். பயிருக்கு வேலியிட்டு பாதுகாப்பது போல் ஆன்மீகத்தில் ஈடுபடும் போது உன் மனதில் தோன்றும் அழுக்குகளை நீக்கிக் கொண்டு வர வேண்டும். அதற்கு தகுந்த படியே உன் மனதை பக்குவப் படுத்திக் கொண்டு வர வேண்டும்.

கூத்து, படக்காட்சி முதலியவற்றை காணும் போது உன்பக்கத்தில் எது நடந்தாலும் தெரியவில்லை. உன் கண்ணும் கருத்தும் அந்த படக்காட்சியிலேயே ஒன்றி விடுகின்றன. அது போல் ஆன்மீகம் என்ற படக்காட்சியில் அபிஷேகம், அர்ச்சனை, மௌனம், தருமம், தியானம், தொண்டு போன்ற காரியங்களில் ஈடுபடும் போதுதான் நீங்கள் முழுமையான ஆன்மீக முன்னேற்றம் பெறமுடியும். இந்த உலகியல் வாழ்க்கை என்ற படக்காட்சியைவிட தெய்வப் படக்காட்சி உங்களுக்கு உபயோகம் உள்ளது.

சினிமா படக்காட்சியின் போது நீங்கள் அமைதியையும், மௌனத்தையும் கடைப்பிடிப்பது போல் ஆன்மீக படக்காட்சியிலும் நீங்கள் அமைதியையும், மௌனத்தையும் கடைப்பிடிக்க வேண்டும. இரவில் ராஜா வேடம் போட்டாலும் பகலில் அவன் சாதாரண மனிதன் தானே? அதுபோல் **ஆன்மீகத்தில் வேடம் போட்டாலும் அது நிலைக்காது.** உண்மையான தொண்டும் பொறுப்புணர்வும் இருக்க வேண்டும். அதுதான் உனக்கு நிலைக்கும்.

செடி நடும்போது புல், பூண்டு, போன்ற களைகள் தோன்றத் தான் செய்யும். ஆணிவேர் ஊன்றிச் செடி மரமான பின் களைகளால் மரம் பாதிக்கப்படுவதில்லை. அதுபோல் ஆலயத்தில் வந்து ஆன்மீகத்தில் ஈடுபடும் போடு தொல்லைகள் வரத்தான் செய்யும். செடி அழியாமால் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் தெய்வ பக்தியையும் அருள் நெஞ்சத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆடம்பர செலவுகள் தவிர்க்க வேண்டும். பயபக்தியும் தங்களுக்குள் கட்டுப்பாடும் இருக்க வேண்டும் தெய்வ பக்தி குறைந்தால் அழிவு உண்டாகும்.

இனி எந்த துறையில் அழிவு உண்டு. அதிலிருந்து விடுபட விரும்புகிறவன் ஆன்மீகத்தில் ஈடுபாடு வைத்துக் கொண்டு மனக்கட்டுப் பாட்டை வளர்த்தக் கொள்ள வேண்டும்.

பருந்து ஒன்று தத்தி, தத்தி மேலே பறக்கின்றது. ஒரு குறிப்பிட்ட தூரம் மேலே சென்ற வுடன் சிறகுகள் அடித்துக் கொள்ளாமல் வானத்தில் அப்படியே மிதக்கின்றது. அடுத்த கணம் கீழே ஒரு கோழிக்குஞ்சைப் பார்த்தவுடன் அந்த கோழிக்குஞ்சுக்கு ஆசைப்பட்டு கீழே வருகின்றது. தாய்க் கோழி தன்குஞ்சினைப் போராடிக் காப்பாற்றுகின்றது. ஏமாந்த பருந்து மீண்டும் மேலே பறப்பதற்கு சிரமப்படுகிறது.

ஆன்மீகத்திலும் நீ மெல்ல மெல்ல மேலே பறந்து போகலாம். மேலே சென்றதும் பேரானந்தத்தில் மிதந்த படி கிடக்கலாம். முக்தியும் அடையலாம். ஆன்மீகத்தில் பல கஷ்டங்கள் உண்டு. தொல்லைகள் உண்டு. அவற்றையும் மீறிக் கொண்டு மேலே போனால் உனக்கு முக்தியும் உண்டு.

அதைவிட்டு விட்டு கோழிக்குஞ்சுக்கு ஆசைப்படும் பருந்து

போலே பந்தபாசம் காரணமாக நீ அடிக்கடி கீழே இறங்கினால் மீண்டும் கஷ்டப்பட்டுத்தான் மேலே போக வேண்டும். தரைக்கு வந்து விட்டு மேலே போக பருந்து எவ்வளவு சிரமப்படுகிறதோ அந்த அளவிற்கு நீயும் மேலே போவதற்கு அதிகமாக சக்தியை செலவழிக்க வேண்டிவரும்.

அந்த பருந்து போல மேலே சென்று மிதப்பதற்கு மட்டும் முயற்சி செய்!. அந்த பருந்து போல கோழிக்குஞ்சுக்கு ஆசைப்பட்டு கீழே இறங்கி வராதபடி பார்த்துக்கொள்.

காய்ந்த மரச்சட்டத்தில் ஆணி அடித்து படத்தை மாட்டினால் படம் விழாமலிருக்கும். பச்சை மரச் சட்டத்தில் ஆணியடித்து மாட்டினால் மரச்சட்டம் காயக் காய படமும் நெகிழ்ந்து விடும். அதுபோல ஆன்மீகத்தில் பந்த பாச மற்ற உணர்வோடு நீங்கள் ஈடுபட்டால் அந்த ஈடுபாடு நிலைத்து நிற்கும். பந்த பாசங்களோடு ஆன்மீகத்தில் ஈடுபட்டால் உங்கள் ஆன்மீக ஈடுபாடும் வர வர விழுந்து விடும்.

ஆன்மீகம் என்பது ஒரு தேன் கூடு போன்றது. தேனீக்கள் பல இடங்களில் பறந்து சென்று தேனை சேகரித்து வைக்கின்றன. மனிதன் ஒரு தீப்பந்தத்தின் துணையுடன் தேனீக்களை விரட்டி விட்டு தேனையடைய பறித்துக் கொள்கின்றான். கூடு கலைக்கப்பட்டாலும் தேனீக்கள் மனம் தளர்வதில்லை. மீண்டும் தேன் கூடு கட்டும் முயற்சியில் இறங்கின்றன.

அதுபோல ஆன்மீகத்திற்கும் காலந்தோறும் எதிர்ப்புக்கள் வந்தபடி இருக்கும். எந்த எதிர்ப்பு வந்தாலும் ஆன்மீகத்தை அழித்து விட முடியாது. ஆன்மீகந்தான் அழுக்கை அகற்றுகின்றது. அழுக்குச் சேரச்சேர அழுகும் நிலை ஏற்படும். அதனால் உள்ளத்துள் சேர்கிற அழுக்குகளை அகற்ற வேண்டும்.

துலக்க துலக்க பாத்திரம் பளபளப்பேறி பொலிவு அடைவதைப் போல ஆன்மீகத்தில் நீ எவ்வளவுக்கெவ்வளவு ஈடுபடுகின்றாயோ அவ்வளவுக்கவ்வளவு உன்நிலை மேம்பாடு அடைசின்றதென்று பொருள். **ஆன்மா என்பது தாய்மை உணர்வு. ஆன்மீகம் என்பது தாய்மை உணர்வோடு உயிர்களிடம் அன்பு கொள்வது.**

இந்த தாய்மை உணர்வு இருப்பதால் தான் தாய்பறவை தன்னையும் காத்துக்கொண்டு தன் குஞ்சுகளையும் காப்பாற்றுகின்றது. அதனால் தான் ஆன்மாவையே அம்மா என்கிறார்கள். தாய்மை உணர்வு பெண்களிடம் அதிகம் உண்டு. இது நவ நாகரீகமான காலம் இருந்தாலும் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு குழந்தைப் பருவத்திலேயே நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

நாகரீகம் என்ற பெயரில் அநாகரீகம் தான் தற்போது வளர்ந்து வருகின்றது. அந்த அநாகரீகம் அழிவுக்கு வழிவகுக்கும். ஆன்மீகம் அநாகரீகத்தை வெல்லும். மனிதன் ஆன்ம உணர்ச்சியினால் தெய்வத்தூற்கு ஒரு உருவம் கொடுத்து சிலையாக வடிக்கின்றான். ஆன்மாதான் சிலைவடிவில் அங்கே மௌனமாகக் குடியிருக்கின்றது. சிலை பேசுமா? என்று நினைக்கிறீர்கள். அந்த சிலை இருந்த இடத்தில் இருந்து கொண்டு வருகிறவர்கள் போகிறவர்கள் எல்லோரையும் பார்த்து அவரவர்களின் உண்மைக் கதைகளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால் என்ன ஆகும்?

நானும் இங்கே இந்த சிலை போலத்தான் நீங்கள் செய்கின்ற எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வெளியே சொல்லாமல் விழுங்கிக் கொண்டு இருக்கின்றேன். போகக் கூடாத இடத்திற்குப் போக வேண்டும் என்று நினைப்பதும் உண்ணக் கூடாத உணவை உண்ண வேண்டும் என்று நினைப்பதும் ஏன்? மன உறுதி இல்லாமையே காரணம்.

மனிதனின் ஆன்மா மனம் என்ற கடிவாளத்தை பிடித்து இழுத்தால் தான் மனக்கட்டுப்பாடு வரும் மனிதன் தன்னைத்தானே உருவாக்கி கொள்வதற்கு மனதில் எழும் ஆசைகளே காரணம். ஒரு வண்டி ஒழுங்காக ஓட வேண்டுமானால் சக்கரம் வேண்டும் எண்ணெய் வேண்டும் இவற்றோடு மூன்றும் பொருந்தி செயல்பட வேண்டும். அப்போது தான் வண்டியும் ஒழுங்காக ஓடும். அதுபோலவே உன் எண்ணங்கள், செயல்கள் உன்மூளை மூன்றும் ஒன்றாக இருந்தால் தான் ஆன்மீகத்தில் நீ வெற்றி பெற முடியும். சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்று முரண்பட்டு வாழக் கூடாது.

ஆன்மீக நண்பன்.


**இலண்டனில் ஒரேயொரு தமிழர்**

**நகை மாளிகை**

**நயம், நாணயம், நம்பிக்கைக்கு**

# Western Jewellers

**உங்கள் வீட்டுத் திருமண, பிறந்தநாள் வைபவங்களா!**

**அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்**

230 Upper Tooting Road

Tooting Broadway London SW17

Tel: 0181 767 3445

# ராமனுக்கு சீதை செய்த உபதேசம்

ராமாயணம் என்பதைக் கதையாக பார்க்கிறவர்களுக்கு அருமையான கதை. காவியமாக பார்த்திறவர்களுக்கு நயங்களுடன் கூடிய பேரிலக்கியம். இறை உணர்வோடு அணுகினால் வேதக்கருத்துக்களை அறநெறிகளை அழகாகவும் எளிமையாகவும் எடுத்துக் கூறும் விரிவுரை.

வால்மீகி இப்படி ஒரு அற்புதத்தை சாதித்து இருக்கின்றார். வேதக் கருத்துக்களை வால்மீகி ஆங்காங்கே தமது ராமாயணத்தில் எடுத்துரைக்கும் பாங்கு மெய்சிலிர்ப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

வேதப்பண்பாடு பெண்களை ஆண்களுக்கு இணையாகச் சித்தரித்து மட்டுமன்றி சில சமயங்களில் ஆண்களை விடவும் உயர்ந்த அந்தஸ்த்தை அளிக்கின்றது. தர்ம சூட்சுமங்களை அறிந்தவர்கள் இந்த வேதக் கருத்தை ஏற்றுக் கொண்டே பேசுகிறார்கள். கர்மங்களின் விவரங்களை சொன்ன பிறகு கடைசியாக இதில் ஏதாவது விட்டுப் போயிருந்தால் அதை பெண்களிடம் இருந்து தெரிந்து கொள்ளுங்கள், என்று சொல்கிறார்கள்! காரணம் என்ன பெண்கள் இயல்பாகவே தர்ம தத்துவங்களின் கர்ப்பமாக விளங்கி வருவதுதான் பிரமாதமாகப் படித்து அறியாத பெண்கள் கூட அனுபவத்தாலும் உள்ளுணர்வாலும் தர்மத்தை அறிந்து இருப்பார்கள். தர்மத்தை மீறி நடப்பதற்கு கூசுவார்கள்.

சீதை குடும்ப வாழ்க்கை நடத்தி சாதாரணமான பெண்போல அடக்கமாக வாழ்ந்தவள் தான். ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் தர்ம சுவரூபமான ராமனுக்கே தர்மத்தை உபதேசிக்கின்றாள் என்றால் ஆச்சரியமாக இருக்கும். இது தான் பாரத தேசப் பெண்களின் பண்பாட்டுப் பெருமை இங்கும் அங்குமாக சில விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால் பொதுவாக பாரதப் பெண் தர்மத்தை தன்னியல்பாக உணர்ந்தவளாக இருக்கின்றாள். எனவே தான் அவள் தர்ம பத்தினி என்று குறிப்பிடப்படுகிறாள். தான் தர்மமார்க்கத்தில் நடப்பது உடன் கணவனுக்கு தர்மத்தை எடுத்து சொல்லக் கூடிய ஆற்றலுடையவள் ஆகவும்

விளங்குகிறாள். இன்றைக்கும் பல சாதனையாளர்கள் வெளிப்படையாகவே தங்களுக்கு பக்கபலமாக நின்றது. தங்கள் மனைவி என்று சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது கூறி மகிழ்வதைக் காண்கிறோம் அல்லவா?

சரி சீதை ராமனுக்கு தர்மத்தை எடுத்துரைத்த இந்த சந்தர்ப்பம் என்ன என்று பார்ப்போம். இருவரும் காட்டில் ஏகாந்தமாக பேசிக் கொள்கின்றார்கள். சீதை கூறுவது லட்சுமணன் காதில் கூட விழ வாய்ப்பில்லை. ஆனால் வால்மீகி அந்த அந்தரங்க உரையாடலை உலகம் அறிய தமது நூலில் அதன் முக்கியத்துவம் கருதி விரிவாகச் சொல்கிறார்கள்.

காட்டுக்கு வந்துள்ள ராமனிடம் இரண்டு தடவை ரிஷிகள் வந்து சரணடைந்து ராட்சதர்களால் தங்களுக்கு நேர்ந்துள்ள துன்பங்களை விளக்குகிறார்கள். ஒரு ரிஷிக்கு ஒரு கை இல்லை. இன்னொரு ரிஷிக்கு ஒரு கால் இல்லை. இவை அரக்கர்களால் ஏற்பட்ட நிலை. தங்களை ரட்சிக்க வேண்டுகிறார்கள். மாவீரனும் கருணைக்கடலுமான ராமன் ராட்சதர்களை வதம் செய்து ரிஷிகளை காப்பதாக சத்தியம் செய்கிறான். ராமன் சொல்கிறான் நான் தந்தையின் சொல்லை காப்பாற்ற கானகம் வந்தேன் இங்கு உங்களை பார்த்த பிறகு உங்கள் காரியமாகவும் வந்திருப்பதாகத் தோன்றுகிறது.

ஒரு அரிய செயலிலிருந்து இன்னொரு அருஞ்செயல் எதேச்சையாக கிளை விடுவதை ராமன் இப்படி குறிப்பிடுகிறான். ரிஷிகளின் துன்பத்தையும் ராமனின் கருத்தையும் அருகிலிருந்து பார்த்துக் கொண்டு இருக்கின்றாள் சீதை ஆனால் அப்போது ஒன்றும் வாய் திறக்கவில்லை. பின்னால் சுதீக்ஷண ஆச்சிரமத்திலிருந்து ராமன், சீதை, லட்சுமணன் ஆகிய மூவரும் புறப்பட்டு ஒற்றையடிப் பாதையால் சென்று கொண்டிருக்கும் போது லட்சும்ணன் காதில் விழாதவாறு கணவனிடம் தனிமையில் பேசுகின்றாள். மிக ஆழமான அன்பு நிறைந்த கருத்துக்கள். கணவனுக்கு உரிய மரியாதை கொடுத்துப் பேசினாலும் சொல்ல வேண்டியதைத் தயங்காமல் சொல்கிறாள்.

ஓ ராமனே! மனிதனிடத்தில் மூன்று துர்குணங்கள் உண்டு ஒன்று பிறர் பொருள்களில் ஆசை வைப்பது இரண்டாவது

பரஸ்திரீயிடம் ஆசை கொள்வது மூன்றாவது காரணமின்றி கோபித்துக் கொள்வது உங்களிடத்தில் முதல் மூன்று கெட்ட குணங்களும் இல்லை. ஆனால் முன் கோபம் என்கின்ற பொல்லாத குணம் உங்களிடம் இருப்பதை சற்று முன்பார்த்தேன். க்ஷத்திரியர்களுக்குக் கோபம் அவசியயம் தான். ஆனால் அது காரணத்தோடு கூடய தார்மீகக் கோபமாக இருத்தல் வேண்டும். காரணமின்றிக் கோபித்தால் மக்களின் நன்மதிப்பை பெற முடியாது. உங்களுக்கு எதிராக ஒரு தீங்கும் செய்யாத ராட்சசர்களை வதம் செய்வதாக உங்களை வாக்களிக்க செய்தது உங்கள் முன் கோபமே. ரிஷிகளுக்கும் ராட்சதர்களுக்கும் இடையே விரோதம் இருக்கின்றது என்றால் நீங்கள் நடுநிலையில் இருந்து சமாதானம் பண்ண முயற்சி செய்துருக்க வேண்டும். அவ்வாறின்றி ஒருவர் பக்கம் சேர்ந்து இன்னொருவரை எதிர்த்தால் அது அநியாயமாகவே கருதப்படும். சண்டை போடும் கட்சிகளில் யார் தாக்குகிறார்கள். யார் தாக்கப்படுகிறார்கள் என்பதையெல்லாம் இரு தரப்பு வாதத்தையும் கேட்டறிந்த பிறகு தான் ஒருவனைக் குற்றவாளியாக்க முடியும்.

வனவாசத்திற்கு வந்த நீங்கள் ஆயுதங்களுடன் வந்ததே நியாயம் இல்லை. வனவாசசம் சாந்தி நிலைக்கவே ஏற்பட்டது. கையில் ஆயுதம் இருந்தால் சும்மா இருக்கவிடாது. ஆயுதங்களை உதறி விடுங்கள். ராஜ்யமும் வேண்டாம் ஆயுதங்களும் வேண்டாம். பூரணமான சாந்தியை தேட வேண்டிய இடத்தில் யுத்தத்துக்கு ஏன் அடி கோலுகின்றீர்கள்?

சீதை கூறுவதையெல்லாம் ராமபிரான் பொறுமையோடு கேட்டுக் கொள்கிறார். கருத்துக்களின் ஆழத்தை அனுபவிக்கின்றார்கள். சீதை முகத்தில் தர்ம ஒளி ததும்பி நிற்பதை பார்த்து பரவசமடைகிறார்.

சீதை முடிவாக ராமனுக்கு தர்ம சூட்சுமத்தை விளக்குகிறாள். ராமா! மனித வாழ்க்கை என்பது இயற்கை நியதி மேல் நின்று லௌகிகமாகத் தோன்றினாலும் தர்மத்தின் அடிப்படையிலேயே நிற்கிறது. இயற்கை நியதிகளும் செல்வம், சுகம் போன்றவையும் தர்மத்தின் அடிப்படையிலேயே இயங்க வேண்டுமென தர்மத்திலிருந்து வழுவாமல் வாழ்க்கை நடத்த

தர்மத்தின் உதவியையே எதிர்நோக்கி செயல்பட வேண்டும். தார்மீக கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடப்பது கஷ்டம் தான் ஆனால் அதைக் கடைப்பிடிக்கும் போதுமான வாழ்க்கை அர்த்தமுள்ளாகிறது. வாழ்நாள் என்பது சுகம் மட்டுமல்ல கஷ்டங்கள் நிறைந்தது. கஷ்டப்பட்டால் தான் சுகம் பெற முடியும். சுகத்திலிருந்து சுகம் உண்டாகாது. அத்தனை காலம் அரண்மனையில் சுகமாக வாழ்ந்தோம். இப்போது கஷ்டப்படுவோம். இந்த கஷ்டம் நம்மை சுகத்துக்கு அழைத்துச் செல்லும்.

சீதையின் வாக்கிலே அமைந்துள்ள உண்மை வேதத்தில் உள்ள தத்துவமே! கஷ்டப்பட்டு உழைக்காதவனை தேவர்கள் நண்பர்களாகக் கருத மாட்டார்கள் என்று ரிக் வேத மந்திரம் கூறுகின்றது.

தர்மம் என்பது தானம் கொடுப்பதையே குறிக்கின்றது என்று பாமர மக்கள் நினைக்கின்றார்கள். தானமும் ஒரு தர்மம் தான். ஆனால் தானமே தர்மமாகிவிடாது. தர்மம் என்பது வாழ்நாளில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகள். லௌகிக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் போதே தார்மீக நெறிகளையும் கடைப்பிடிப்பவனை தெய்வத்தன்மை உடையவனாகின்றான். இத்தகைய தார்மீக வாழ்க்கை நடத்த தெய்வ பக்தி துணை நிற்கின்றது.

இந்துமதம் என்பதற்குச் சுருக்கமான விளக்கம் தேவையென்றால் தர்மம் தான் இந்து மதம் என்று கூறிவிடலாம் இந்து மதத்திற்கு கடவுளர் உண்டு அந்தக் கடவுள் அறநெறிகள் உருவில் வாழ் நாளில் நம்முடனேயே இருந்து வருகின்றார். இதை உணர்ந்து செயல்படுவது நம் கடமை இதுதான் சீதையுடைய உபதேசத்தின் சாரம்.

(கல்கி என்ற நூலில் இருந்து தேர்ந்தெடுத்த பின் அவற்றிலிருந்து சுருக்கமாக தொகுக்கப்பட்டது.)

என்றும் உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் கட்டுப்பட்ட
க. பிரகாஷ்

# மகாத்மா காந்தியின் இறை நம்பிக்கை

கடவுள் பிரார்த்தனையே என்றும் என்னைக் காப்பாற்றியது. பிரார்த்தனை மட்டும் இல்லை எனில் என்றோ நான் பைத்தியமாகி இருப்பேன். அனைவருக்கும் ஏற்படுவது போலவே எனது பொது வாழ்வு, குடும்ப வாழ்வு இரண்டிலும் கசப்பான அனுபவங்கள் பல ஏற்பட்டன. அந்த அனுபவங்களால் மனதில் ஏற்பட்ட நிராசையிலிருந்து விடுபடுவதில் நான் வெற்றி பெற்றேன் என்றால் அதன் காரணம் பிராத்தனை எனது வாழ்வின் அங்கமாக மாறவில்லை. ஆனால் இது எனது அடைக்கலமாக விளங்கியது. பிரார்த்தனை செய்யாமல் மனத்திற்கு அடைக்கலம் கிடைக்கவில்லை. இறைவனிடம் எனது நம்பிக்கை அதிகரிக்க அதிகரிக்க பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற எனது மனத் தவிப்பும் அடக்கமுடியாததாக ஆயிற்று. பிரார்த்தனையில்லாத வாழ்வு ரசமற்றதாகவும் சூன்யம் நிறைந்தாகவும் தோன்றியது.

நான் தென்னாபிரிக்காவில் இருந்த காலத்தில் பலமுறை கிறிஸ்தவர்களின் பொதுப் பிரார்த்தனையில் கலந்து கொண்டேன். ஆனால் அவை என் மனதைக் கவரவில்லை. எனது கிறிஸ்தவ நண்பர் இறைவனின் முன்னால் மிகுந்த பயபக்தியுடன் பிரார்த்தித்தார். ஆனால் என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை. இந்த விசயத்தில் தோல்வியே கிடைத்தது. என் மனதை உறுத்தவில்லை. ஆனால் இந்த நிலை மாறிய போது உடலிற்கு உணவு எவ்வளவு அவசியமோ அதுபோல் ஆத்மாவிற்கு பிரார்த்தனை அவசியமாகின்ற அளவு உடலிற்கு உணவு அவசியமில்லை. உடலை ஆரோக்கியமாக்க இடையில் உபவாசம் அவசியம். ஆனால் பிரார்த்தனை என்ற உணவைத் தியாகம் செய்வது எந்த விதத்திலும் நன்மையைத் தருவதோ விரும்பத்தக்கதோ அல்ல. பிரார்த்தனையால் அஜீரணம் ஒரு போதும் ஏற்படவில்லை.

மக்கள் நான் மன அமைதியுடன் இருப்பதைக் கண்டு

பொறாமைப்படுகின்றனர். அந்த அமைதி எனக்கு இறை பிரார்த்தனையின் மூலமே கிடைக்கின்றது. யாருடைய மனதிலாவது இறை நம்பிக்கையை ஏற்படுத்துவது எனது சக்திக்கு அப்பாற்பட்ட விசயமாகும். அறிவைச் சார்ந்திருந்தால் பொய்த் தோற்றமாகும். ஏனெனில் தர்க்கத்தின் மூலம் இறைவனிடம் நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது. இறைவனை அறிவினால் அறியக்கூடியவரல்ல. அவர் அறிவுக்கு அப்பாற்பட்டவர். ஒரு முறையாவது நீங்கள் இறைவன் இருப்பதை ஏற்றுக் கொண்ட பின்னர் உங்களால் பிரார்த்தனை செய்யாமல் இருக்க முடியாது. நாம் இறைவனைச் சரணடைந்திருப்பதைத் தினமும் அவரிடம் கூற வேண்டும் என கடவுள் எதிர்பார்த்ததில்லை. ஆனால் நாம் அவ்விதம் செய்வது மிகவும் அவசியமாகும். அப்படி நாம் செய்வதன் மூலம் துக்கமும் நம்மைப் பாதிக்காது என நான் உங்களுக்கு உறுதி கூறுகின்றேன்.

மகாத்மா காந்தி

இயற்கை நாம் படிக்க வேண்டிய ஒரு புத்தகமாகும். இயற்கையின் ஒவ்வொரு பொருளும் அப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமாகும்.

அமிர்தானந்தமாயி

அமலன்
Walthamstow
London E17
15.12.96

(நெஞ்சோடு நெஞ்சம் தனது நண்பனுக்கு எழுதும் பதில் கடிதம்)

பிரியமுள்ள நண்பன் அஜெந்தனுக்கு,

உனது கடிதம் கண்டேன். உடன் பதில் போடாமைக்கு மன்னிக்கவும். அஜெந்தன் நீ கூறியது போல் ஆன்மீகத்தில் நான் நாட்டம் கொண்டுள்ளது உண்மையே, ஆயினும் அதுபற்றி ஆழமான அறிவு உடையவன் அல்ல நான். இப்போது தான் புத்தகங்கள் படிக்கத் தொடங்கியுள்ளேன். வேறு விதமாகக் கூறினால் நுனிப் புல் மேய்ந்து கொண்டிருக்கிறேன்.

நீ சில கேள்விகள் கேட்டிருக்கிறாய். என்னால் முடிந்தவரை பதிலளிக்கப் பார்க்கிறேன். எனக்கு தெரியாத பட்சத்தில் யாரிடமாவது கேட்டோ? அல்லது புத்தகங்களிலிருந்து படித்தறிந்தோ எழுதுகின்றேன். ஆமாம்! நீ கூட இப்போது புத்தகங்கள் படிக்கத் தொடங்கியிருப்பதாக எழுதியிருந்தாய். நல்லது. இந்தப் பழக்கத்தை கை விட்டு விடாதே, வழக்கப்படுத்திக் கொள். அஜெந்தன் எனக்கு இப்ப பழைய ஞாபகம் வருகிறது. எங்கள் ஊரில், நாங்கள் சிறுவர்களாக இருந்த போது பெரியப்பா ஒருவர் எங்களது புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதற்காக **வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்** என்றும் **கண்டதைப் படித்தால் பண்டிதன் ஆவான்** என்றும் அடிக்கடி கூறுவார். அந்தக் காலத்தில் கண்டதைப் படித்தல் என்பதை கண்ணில் பட்ட எதையாவது படித்தல் என்று அர்த்தம் கற்பித்து

வைத்திருந்தேன். ஆனால் இப்போது அதை வித்தியாசமாக விளக்கிப் பார்க்கிறேன். கண்டதைப் படித்தல் என்பதை கண்டு அதைப் படித்தல் என்று பிரித்து அறியலாம். அதாவது நல்லதை இனங்கண்டு அதைப் படிக்க வேண்டும். நீ கூட உனக்கு கிடைக்கும் சொற்ப நேரத்தில் நல்ல விடயங்களை தேர்ந்தெடுத்து படிப்பதே சிறந்தது. அதாவது கண்டதையும் படிக்காதே கண்டு அதைப் படி.

விதியைப் பற்றி கேள்வியெழுப்பியிருக்கிறாய் எல்லாம் முடிந்த முடிவு என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். விதியை மதியால் வெல்லலாம் என்ற கூற்றை கவிஞர் கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதத்தில் பின்வருமாறு விமர்சித்திருக்கிறார். அவ்வாறு ஒன்று இருக்குமானால் மதியால் வெல்லும் செய்கை தான் அங்கே விதியாகவே அமைந்திருக்கும் என்று கூறுகிறார். அதாவது நான் கோடிட்டுக் காட்டிய விதி என்ற சொல் அக்குறிப்பிட்ட வசனத்தில் அர்த்தமற்றுப் போகிறது. விதி வலியது என்பதில் வேண்டாம் சந்தேகம்.

விதியே என்று முயற்சியில்லாமல் இருத்தல் முறைகேடானது. பகவான் ஸ்ரீ சத்ய பாபா உவமானம் ஒன்றின் மூலம் இதை விளக்கியிருக்கிறார். புற்றரையொன்றின் நடுவே ஒரு கம்பத்தில் கயிற்றினால் மாடு ஒன்று கட்டப்பட்டுள்ளது என்று எடுத்துக் கொள்வோம். கம்பத்தை மையமாகவும் கயிற்றை ஆரையாகவும் கொண்டு ஒரு வட்டம் ஒன்றைக் கீறினால், அந்த வட்டத்தூற்கு வெளியே உள்ள புல்லை மாட்டினால் மேய முடியாது. மாடு கயிற்றினால் கட்டப்பட்டதையும், வட்டத்துக்கு வெளியே புல் மேயமுடியாதிருத்தலையும் விதிக்கு ஒப்பிடலாம். ஆனால் வட்டத்துக்கு உள்ளே முயற்சிக்கு ஏற்ப புல்லை மேய்ந்து கொள்ளலாம். இதிலிருந்து நீ குறிப்பிட்டது போல் விதியும் முயற்சியும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல என அறிவாய்.

இதைவிட பகவத்கீதையின் கரும யோகத்தில் கடமை என கருமம் செய்ய வேண்டியது எமது பொறுப்பு என்று கூறப்படுகிறது. மேலும் ஒரு செயலைச் செய்யும் போது உயர்ந்த குறிக்கோளுடன் செய்யும் போது செய்தவன் மேல் நிலைக்கு வருவான் என்று சொல்கிறது.

அஜெந்தன் நீ கூட உன்னைப் பற்றிக் கடிதத்தில் குறிப்பிடும் போது கடமைகளை சரிவர செய்ய எத்தனிக்கும் இறை நம்பிக்கையுள்ள சராசரி இளைஞன் என்று குறிப்பிடுகிறாய். இந்த அருங்குணம் ஒன்றே போதும் நீ மேல் நிலைக்கு வருவதற்கு.

கோவிலுக்கு செல்வதில் அவ்வளவு ஈடுபாடு இல்லை என்று எழுதியுள்ளாய். என்ன அர்த்தத்தில் நீ அப்படி குறிப்பிட்டுள்ளாய் என்பது எனக்கு புரியவில்லை. கடவுள் தூணிலும் இருக்கிறார். துரும்பிலும் இருக்கிறார். எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை கோவிலுக்குப் போய்த்தான் தரிசிக்க வேண்டுமா? என்ற ரீதியில் எழுதியிருந்தால் இதற்கு ராமகிருஷ்ணர் கூறிய விளக்கத்தைச் சொல்கிறேன். பசுவின் இரத்தமே பாலாகிறது. பசுவின் உடம்பில் எல்லா இடத்திலும் இரத்தம் ஓடினாலும் இதன் மடியில் மட்டுமே அது பருகக்கூடிய பாலாக வருகிறது. இது போல இறைவனும் எல்லா இடத்திலும் இருந்தாலும் அவர் எழுந்தருளியுள்ள இடம் இறைஸ்தலமான கோவில்களே.

உள்ளத்தில் இருத்தி இறைவனை வழிபடலாம் கோவிலுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை இவ்வாறு நீ நினைத்திருக்கலாம். பெரிய புராணத்தில் வரும் சிறு கதை இது. பாண்டிய மன்னன் ஒரு பெரும் கோயிலை கட்டிக் கொண்டு இருந்தான். கோயில் கட்டிடம் முடியும் தறுவாயில் இருந்தது. மன்னன் கும்பாபிஷேகத்திற்கு தினம் குறித்தான். இறைவனை குறித்த தினத்தில் கோயிலில் எழுந்தருளும்படி மனதில் வேண்டினான். இறைவன் ஒரு நாள் மன்னனது கனவில் தோன்றி தன்னால் அந்தக் குறிப்பிட்ட தினத்தில் கும்பாபிஷேகத்திற்கு வர

முடியாதென்றும், பூசலார் எனும் பக்தரின் கோவில் கும்பாபிஷேகத்திற்கு போவதாயும் சொல்லி மறைந்தார். பாண்டிய மன்னன் மறுநாள் பூசலார் கட்டும் கோயிலைக் காட்டும் படியும் வேண்டினான். பூசலார் தான் கட்டும் கோயில் வெளியே அல்ல என்றும் உள்ளத்தில் உள்ளது என்றும் விளக்கிக் கூறினார்.

அஜெந்தன் கோவில் என்பது உள்ளத்தின் உள்ளே இருந்தால் என்ன, அதற்கென ஒரு தனி மகிமை இருக்கத்தான் செய்கிறது. சும்மாவா சொன்னார்கள் கோயில் இல்லாத ஊர் பாழ் என்று. உள்ளத்தில் கோயில் கட்டும் அளவுக்கு நமக்கு மனப்பக்குவம் உள்ளதா என்பது கேள்விக்குறியே! அத்தோடு எப்பொழுதும் இறைவனையே நினைக்கும் பூசலார் எங்கே? அன்றாடம் மனதை அலைய விடும் நாம் எங்கே?

அஜெந்தன் பக்தியில் போலித்தன்மை என்பது புதியதொன்றல்ல. போலிகள் எல்லா இடத்திலும் எல்லா மதத்திலும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏன் நல்லவர்கள் கூட சந்தர்ப்பங்களில் போலித்தன்மையுடன் அல்லது கெட்ட எண்ணங்களுடன் நடந்து கொள்ளக்கூடும். நான் கூட இப்படியான சில பேரைச் சந்தித்துள்ளேன். ஒருவன் ஏமாற்றுகிறான். என்பதை விட மற்றவர் ஏன் ஏமாற்ற இடம் கொடுத்தார்கள் என்ற எண்ணமே என்மனதில் தூக்கலாக நிற்கிறது. ஆன்மீகம் என்பதற்காக எல்லாவற்றையும் அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. வெளுத்ததெல்லாம் பால் என்று கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நீ கவலைப்படாதே இறையருளால் நான் கொஞ்சம் உஷாராகவே உள்ளேன். அஜெந்தன் கடிதத்தின் நீளம் கூடிவிட்டது போல் தெரிகிறது அல்லது உனது பாஷையிலே சொல்வதால் அறுவை கூடிவிட்டது போல் உணர்கிறேன் இத்தோடு முடித்துக் கொள்கிறேன். தொடர்ந்தும் கடிதங்களினூடு அளவளாவுவோம்.

இப்படிக்கு,

அன்புடன் அமலன்.

(1)

# நெஞ்சோடு நெஞ்சம்

(இரு இணைபிரியாத நண்பர்களிடையே ஏற்படும்
ஆன்மீகக் கடிதத் தொடர்பு)

அஜெந்தன்
லியோன்
பிரான்ஸ்
1.12.1996

அன்றுபோல் இன்றும் இன்று போல் என்றும் இணைபிரியாத நண்பன்
அமலன்.

உனது கடிதம் கிடைத்தது. எங்கள் பல்கலைக்கழகம் விடுமுறைக்குப் பின்னர் இந்த கிழமை ஆரம்பமாகி விட்டது. அமலன் இந்த நவீன யுகத்தில் தொடர்பு சாதனங்கள் பல உள்ளன. தொலைபேசியில் பரஸ்பரம் பேசிக் கொள்ளலாம். அல்லது உன்னிடம் Computer உள்ளது நீயும் என்னைப் போல் Internet இல் இருக்கின்றாய் E.Mail மூலம் செய்திகளை பரிமாறிக் கொள்ளலாம். ஆனால் நாம் எங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கு வழமையான தபால் முறையே தேர்ந்தெடுப்போம். செலவும் மிகுதியல்லவா எது எப்படியாயினும் மனதிற்கு இந்த முறை தான் இதம் தருகின்றது.

அமலன் கடைசி மடலில் நீ ஆன்மீக விடயங்களில் சற்றே ஈடுபட்டிருப்பதாகவும் தருமத்தின் தலைவன் சாயி பகவானின் சர்வமதக் கொள்கையால் கவரப்பட்டு கொள்வதாக எழுதி இருந்தாய். நல்லது இவையெல்லாம் உன்மனதில் எவ்வளவு வேதனை இருந்தாலும் உன் மனதிற்கு ஆத்ம திருப்தி அளிக்கும் என்று நினைக்கின்றேன். அதைவிட மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கொள்கையில் மகத்தான பற்று வைத்திருப்பவன் நான். சாயி பாபாவையும் அவரது அளப்பரிய சேவைகள் பற்றி பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் ஜப்பான் இளைஞர்களிடமும் கேட்டும், வாசித்தும் அறிந்து இருக்கின்றேன். சர்வமதப் பிரியரான அவர் அனைத்து மக்களையும் மனிதாபிமானம் என்ற ஒரே மதத்தின் அடிப்படையில் இரட்சிக்கின்றார்.

கடைசிக் கடிதத்தில் கடிதம் நீண்டு விட்டதா? என்றும் எனக்கு வாசிப்பதற்கு சலிப்பாக இருக்கின்றதா? என்றும் கேட்டு எழுதி இருந்தாய் இல்லை. உன் கடிதங்களின் தாக்கத்தால் நானும் ஆன்மீகம் சம்மந்தமான விடயங்களை ஓரளவிற்கு வாசிக்கின்றேன். அண்மையில் கூட இலண்டனில் இருந்து இளைய தலை முறையினரின் முயற்சியால் வெளியாக இருக்கும் **ஆன்மீக வலம்** என்னும் காலாண்டு சஞ்சிகைக்கு சந்தா கட்டியுள்ளேன். என்னுடைய நண்பர்களில் சிலர் மனவிரக்தியினாலோ அல்லது வேறு என்ன காரணத்தினாலேயோ தீய பழக்கங்களையும், போதை வஸ்த்துக்களையும் நாடுவதையும் கண் கூடாகப் பார்த்துள்ளேன். இவ்வாறு மனம் போன போக்கில் ஒழுக்கமற்று வாழ்வதற்கு காரணம் மனதின் தெளிவற்ற தன்மையே. ஆன்மீகம் மனதை பக்குவப்படுத்தி மனக் காயங்களுக்கு மருந்தாகும் என்பதில் ஐயமில்லை. நீ படித்த ஆன்மீக விடயங்களை கடித மூலம் பகிர்ந்து கொள்வதில் நான் பெரிதும் வரவேற்கின்றேன்.

அமலன் நீ என்னைப் பற்றி நன்கு அறிவாய். நான் இறை நம்பிக்கையுள்ள கடமைகளை சரிவரச் செய்ய எத்தனிக்கும் ஒரு சராசரி இளைஞன் என்னுள்ளே எழும் கேள்விகள் ஆயிரமாயிரம் அவற்றில் சிலவற்றையேனும் நீ தீர்த்து வைப்பாய் என எண்ணு கின்றேன்.

விதி என்றும், எல்லாம் விதிப்படி தான் வாழ்க்கையில் நடக்கும் என்றும் ஒரு சாரார் சொல்வதை கேட்டு இருக்கின்றேன். இன்னும் ஒரு சாரார் முயற்சி திரு வினையாக்கும் என்றும் உழைப்பே உயர்வுக்கு வழி என்றும் சொல்வதைக் கேட்டு இருக்கின்றேன். இவைகள் ஒன்றுக்கொன்று முரணாய் இருப்பதாகத் தோன்றவில்லையா? எல்லாம் விதிப்படி என்றால் முயற்சி செய்வானேன்? என்கின்ற கேள்வி எழுகிறதல்லவா? இதைத்தவிர முயற்சி வீண், விதிப்படிதான் எல்லாம் என்று எமது இளைஞர் சமுதாயம் நினைத்துவிட்டால் விதியே என்ற செயற்பாடு இன்றி சோம்பேறிகளாக இருந்து விடமாட்டார்களா?

சரி ஏதோ நீண்ட கடிதம் ஒன்றை எழுதி விட்டதைப் போன்ற பிரமை ஏற்படுகிறது. இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன்.......அட! நிறுத்தலாம் என்றால் முடியவில்லை காரணம் கண்ணில்பட்ட ஒரு விளம்பரம் இந்த மேசையில் மறுபுறத்தில் ஒரு மாத சஞ்சிகை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு குறிப்பிட்ட பொருளொன்றில் படமொன்றைப் போட்டு இதையே வாங்கும்படி விளம்பரப்படுத்தி இருக்கின்றார்கள். ஆனால் அதன் அடியில் ஒரு வாசகம் உதட்டில் மட்டுமே ஆன்மீக விடயங்களைக் கொண்டு திரியும் போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள் இந்த வாசகம் என்மனதில் நெருடல்களை ஏற்படுத்துகின்றது. அமலன் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் அனேகர் பெரும்பாலும் நல்லவர்களாகவும், இளகியவர்களாகவும் இருப்பார்கள் இத்தன்மையை சில போலித் தன்மையான பக்தி கொண்டவர்கள் தமக்கு அனுகூலமாக பயன்படுத்தி தமக்கு வேண்டியதை சாதித்துக் கொள்ளலாம் அல்லவா? எதற்கும் நீ கூட கொஞ்சம் உஷாராக இருப்பது நல்லது.

அமலன் கடிதத்தை இத்துடன் தற்காலிகமாக முடிக்கின்றேன். உனது பதிலை (கருத்துக்களை) விரைவில் எதிர்பார்க்கின்றேன். கோவிலுக்கு செல்வதில் எனக்கு அதிக ஈடுபாடு இல்லை. வீட்டில் இருந்தே உனக்காகவும் உன் குடும்ப நலனுக்காகவும் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு
அன்பு மறவாத நண்பன்
அஜெந்தன்

> செல்வந்தர்களை வழிபடத் தொடங்கும் நாள் முதலே ஒரு சமயத்தின் கேடு ஆரம்பிக்கின்றது
>
> ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தர்

அன்புமிக்க ஆன்மீக நெஞ்சங்களே

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நாம் எமது உறவினர்களிடனோ, காதலர்களிடனோ, நண்பர்களிடனோ பல முறைகளில் தொடர்பு கொள்ளலாம். சகல வசதிகளும் எமக்கு உண்டு. இப்படியான வசதிகளை இறைவன் எமக்களித்தது தேவையில்லாமல் பிரயோசனம் இல்லாமல் பொழுது போக்காக பயன்படுத்தவல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். தொலைபேசியில் அனாவசியமற்ற பேச்சுக்களை குறைக்கலாம். அவற்றுக்கு செலவிடும் நேரத்தை ஆன்மீக விடயங்களை பரிமாறிக் கொள்ளலாம். அதுபோல் கடித தொடர்புகள் அவற்றையும் இயன்றளவு முக்கியமாக கருதப்படும் விடயங்களை மட்டும் எழுதி விட்டு மிகுதியை ஆன்மீக விடயங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். இல்லையா? இவையெல்லாம் ஒவ்வொரு ஆன்மீக நெஞ்சங்கள் உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

தாயக மண்ணிலே ஒன்றாக கல்வி பயின்று கொண்டிருந்த இரு இணைபிரியாத நண்பர்கள் அரசியல் சூறாவளி மிகவும் கடுமையாக வீசியதால் தற்காலிக தாயக மண்ணில் இருந்து பிரிய நேரிட்டது. ஆகவே இருவரும் இரு வேறு திசைகளில் பிரிந்தார்கள். அமலன் என்பவர் லண்டனிலும் அஜந்தன் என்பவர் பிரான்ஸிலும் வாழ்ந்தார்கள். இருவருக்குமிடையே தொடர்பு கொள்ள பல வழிகளில் இருந்தும் செலவைக் குறைத்து பணத்தை வேறு தேவைகளுக்கு பிரயோசனப் படுத்த விரும்பியதால் தமது நட்பை கடித மூலம் தொடர்ந்தார்கள்.

தமது உண்மையான நட்பை இருவரும் பிரயோசனப்படுத்த விரும்பியதால் ஆன்மீக விடயங்களை (நிலையான) தெரிவு செய்தார்கள். தம்மை ஆன்மீக பலம் உள்ளவர்களாக மாற்றுவதற்கு பல தரப்பட்ட ஆன்மீக விடயங்களை பரிமாறிக் கொண்டார்கள். ஆன்மீக விடயங்களை பரிமாறிக் கொள்ளும் விடயங்களை (கடிதங்களை) இருவரும்

மிகவும் பத்திரப்படுத்தி வைத்தார்கள். அவர்கள் அவற்றை ஆன்மீக வலம் இதழில் பிரசுரிப்பீர்களா? என்று எம்மோடு தொடர்பு கொண்டு கேட்டார்கள். நாம் நிச்சயமாக பரிசீலனை செய்த பின் பிரசுரிப்போம் என்றோம்.

இரு நண்பர்களினதும் ஆன்மீக விடயங்கள் அடங்கிய கடிதத்தை பார்த்த (வாசித்த) உடனேயே நாம் ஒரு கணம் எம்மை மறந்து விட்டோம். ஏனெனில் இக்கலியுகத்தில் அதுவும் இரு நண்பர்கள் தமது கடித தொடர்பை எவ்வளவுக்கெவ்வளவு புனிதமாக மாற்றி உள்ளார்கள் என்பதை நினைத்து பார்க்கும் போது சிறியவர்களாகிய எம்மால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆன்மீகவிடயங்கள் அனைத்தும் எமக்கு தெரியும் என்றும் தம்மைத் தாமே விளம்பரப் படுத்திக் கொள்ளும் சில போலிகளுக்கு மத்தியில் அதுவும் தாயக மொழியில் தமது ஆன்மீக விடயங்களை பரிமாறிக் கொள்ளும் இவ்விளைஞர்களை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. உங்கள் பணி தொடர எமது நல்லாசிகள் உரித்தாகுக.

பெருமைமிக்க பெண்ணினமே! செயல்திறன்மிக்க இளைஞர்களே!

நீங்களும் உங்கள் காதலர்களிடமோ அல்லது நண்பர்களிடமோ, உற்றார், உறவினர்களிடமோ பரிமாறிக் கொள்ளும் ஆன்மீக விடயங்களை எமது அலுவலகத்திற்கு அனுப்பினால் அவை சிறியவர்களாகிய எம்மால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு (உங்கள் அனுமதியோடு) பிரசுரிக்கப்படும்.

என்றும் அன்புக்கும் ஆதரவுக்கும் கட்டுப்பட்ட
க.பிரகாஷ்

> அன்பின் மூலமாக செய்யப்படும் ஒவ்வொரு காரியமும்
> ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்
> ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தர்

உ

ஓம் சாயிராம்

# நல்லோர் சேர்க்கை (ஸத்ஸங்கம்)

உங்களுக்கு சந்தோசமும், சாந்தியும் கிடைக்க நீங்கள் கட்டாயம் பரிசுத்தமான மனமும், ஆணவத்தினால் மாசுபடாத மனமும், இந்த ஆணவத்துக்கு அடிப்படை காரணமாக காமம், கோபம், மோகம், பேராசை, பொறாமை, வெறுப்பு என்று சொல்லப்படும் மனிதனின் அறுவகை எதிரிகளால் மாசுபடாத மனத்தையும் அடைய முயற்சிக்க வேண்டும். இதற்கு நீங்கள் தேடவேண்டியது நல்லோர் சேர்க்கையும், நல்ல காரியம் செய்தலும், நல்ல எண்ணங்களை கடைப்பிடித்தலும் நல்ல நூல்களை படித்தலுமாம். நீங்கள் ஆயிரக்கணக்கான விடயங்களை கண்டாலும், வார்த்தைகளை கேட்டாலும் நூல்களை வாசித்தாலும் நீங்கள் இவைகளை உங்கள் வாழ்க்கையில் பிரயோகிக்காவிடில் உங்கள் இருதயமான கண்ணாடியிலுள்ள அழுக்கை நீக்க இயலாது. இதனால் உங்கள் இருதயவாசியான இறைவன் அழுக்கு கண்ணாடியில் மறைக்கப்பட்டு பிரதிபலிக்காமலும், வெளியே தெரியாமலும் இருப்பான்.

அளவற்ற சமுத்திரம் இரத்தினங்களுக்கு நிலையம், முத்துக்களுக்குக் கருவூலம் அதன் ரூபம் வர்ணனைக்கு அப்பாற்பட்டது. அதன் ஆழம் மிகமிக அதிகம் உலகத்திலுள்ள அனைத்து உயிரினங்களின் தாகத்தைத் தீர்ப்பது சமுத்திரமே! ஆனால் சமுத்திரத்தின் நீர் உப்பாக இருக்கின்றது. நமது சாக்கடை நீர் மிகவும் அசுத்தமாக இருக்கின்றது. இதை எவரும் கண்களாலும் கூடப் பார்க்கமாட்டார்கள். அந்தச் சாக்கடைத் தண்ணீர் எவ்வளவுதான் அசுத்தமாக இருந்த போதிலும் சமுத்திரத்தோடு சேரும் பொழுது அந்தச் சாக்கடைத் தண்ணீரோடு சமுத்திர நீர் சேர்ந்து விடாது காரணம் என்ன? சமுத்திரத்தின் தண்ணீர் அளவற்றதாக இருக்கின்றது. சாக்கடை

தண்ணீர் குறைவாக இருக்கின்றது. அற்பமானது அளவற்றதோடு சேர்ந்து அளவற்றதாகவே மாறிப் போகின்றது. அது போன்றே நாம் நல்லோர் திருக் கூட்டத்தோடு சேர்ந்தால், நமது அற்ப குணங்களும் கூட நல்ல குணங்களாக மாறி விடுகின்றன. இதையே வேதாந்த பரிபாஷையில் ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் நிர்மோஹத்வே நிச்சல தத்வம் நிச்சலதத்வே ஜீவன் முக்தி எனக் கூறப்பட்டுள்ளது. நல்லோர் சேர்க்கையினால் ஜீவன் முக்தி வாய்க்கின்றது. மேலும் ஓர் உதாரணம்: ஒன்று நெருப்பு மற்றது கரி, நெருப்பு, நெருப்புஸ்தானத்திலும், கரி, கரிஸ்தானத்திலும் இருந்தாலும் கரி, நெருப்பு ஆக முடியாது. இந்தக் கரியை நெருப்பின் அருகில் சேர்க்க வேண்டும். நெருப்போடு தொடர்பு ஏற்படுத்த வேண்டும். அவ்விதம் தொடர்பு ஏற்படுத்தும் பொழுது, கரி எந்தளவு நெருப்போடு சேர்கின்றதோ அந்தளவு நெருப்பு கரியோடு சேர்ந்து விடுகிறது கரியை அருகில் வைத்து விசிறியினால் விசிறினால் கரி முழுமையாகவே நெருப்பாக மாறி விடுகிறது.

க. குமரேசன்

(சத்ய சாயியின் அருளுரைகள் Vol 6 தமிழ் சனாதன சாரதி July 1986 இருந்து தொகுத்தது)

ஏழைகளுக்குச் செய்கின்ற உதவி பற்றி பெருமை அடித்து கொள்ளாதீர்கள். அதற்கு பதிலாக உங்களுக்கு உதவி செய்கின்ற வாய்ப்பை அவர்கள் உங்களுக்குத் தந்ததிற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துங்கள்

ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தர்

# சூழ் நிலையின் வலிமை

கோபாலன் ஒரு ஆடு மேய்க்கும் சிறுவன். ஒரு நாள் நதிக்கரையின் ஓரமாக ஒரு பெண் சிங்கம் இறந்து கிடப்பதை கோபாலன் பார்த்தான். அதன் அருகே அப்பொழுது பிறந்த சிங்கக்குட்டி ஒன்று கிடப்பதையும் பார்த்தான்.

தாய் சிங்கம் இந்த கரையை அடைவதற்காக மறுபக்கத்தில் இருந்து குதித்து பின் நீந்தி வந்திருக்கின்றது. பூரண கர்ப்பிணியாக இருந்ததால் அது குட்டியை ஈன்றுவிட்டு பாவம், களைப்பு மிகுதியினால் உடனே இறந்து விட்டிருக்கின்றது என்று அறிந்து கொண்டான்.

பெற்ற தாயை இழந்து அனாதையாக கிடக்கும் சிங்கக்குட்டியை தூக்கி கொண்டு ஆடுகளோடு வீடு வந்து சேர்ந்தான். கோபாலன் சின்னஞ்சிறு சிங்கக்குட்டி ஆட்டு மந்தையில் ஆடுகளோடு ஒரு ஆடாக வளர்ந்து வந்தது. ஆடுகள் புல்லைத் தின்றன. சிங்ககுட்டியும் புல்லை மேய்ந்து வயிறாரா உண்டது. ஆடு மே, மே என்று கத்தியது. சிங்கக்குட்டியும் மே, மே என்றது. கொஞ்சம் கொஞ்சமாக சிங்கக்குட்டி வளர்ந்து பெரிய சிங்கம் ஆயிற்று. அப்போது ஒரு நாள் பெரிய காட்டு சிங்கம் ஒன்று இந்த ஆட்டு மந்தையை தாக்கிற்று. மந்தையின் நடுவே ஒரு சிங்கம் புல் மேய்ந்து கொண்டிருப்பதை வியப்போடு பார்த்தது. அதை பின் பற்றி சென்று ஆடு சிங்கத்தை பற்றியது. புல்லை மேய்ந்து கொண்டிருந்த சிங்கம் பயத்தினால் மே என்று கத்தியது. காட்டு சிங்கம் அதை இழுத்து கொண்டு போய் ஒரு நீர் நிலைக்கு முன் நிறுத்தியது. பிறகு சிங்கத்தை பார்த்து காட்டு சிங்கம். இதோ நீரில் உன்முகத்தைப் பார். என்னை

போலத்தான் நீயும் இருக்கின்றாய் இந்தா இந்த மாமிச துண்டை ருசித்துப் பார் என்றது. உம் சாப்பிடு என்று கூறிய படி ஒரு சிறு மாமிச துண்டினைச் சிங்கத்தின் வாயில் திணித்தது. புல்லைத் தின்று பழகிப் போன சிங்கத்திற்கு மாமிச உணவு பிடிக்கவில்லை. மே .... மே....என்று பரிதாபமாக கத்திற்று பிறகு ரத்தத்தின் சுவையை மெதுவாக உணர ஆரம்பித்தது. மாமிசத்தை கொஞ்சம் கொஞ்சமாக சுவைத்து உண்ண துவங்கியது. அதை பார்த்து காட்டு சிங்கம் பார்த்தாயா? உனக்கும் எனக்கும் எந்த வித்தியாசமுமில்லை. ஆகவே என்னைப் பின் தொடர்ந்து காட்டுக்கு வா என்று அழைத்து சென்றது.

தன்னுடைய உண்மை இயல்பை மறந்திருந்த இந்த சிங்கக்குட்டியை போல் தான் நாமெல்லாம் இருக்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் ஒரு தெய்வக்கனலின் சிறு பொறி. இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்வதில்லை. பெரிய ஞானி ஒருவர் நம்மிடையே தோன்றி நம் உண்மைநிலையை சான்றுகளோடு விளக்கி நிலைநாட்டும் போது தான் இதை உணர்கின்றோம். பின்பே நம்மிடம் உள்ள குறைகள் நீங்கி பெருநிலை அடைகின்றோம்.

நாம் அந்த ஆட்டுக்குட்டி போல் இருக்கக்கூடாது. நம் சிங்க தன்மையில் ஒன்றுபட ஒவ்வொரு நாளும் முயன்று வர வேண்டும்.

ஒரு ஆன்மீக ஆர்வம் உள்ளவன்

# இந்துமதம்

மனித சமுதாயத்தை தவற்றில் இருந்து நெறிப்படுத்தவும் தன்னம்பிக்கை கொள்ள செய்யவும் தோன்றிய தெய்வ நம்பிக்கையில் காலம் நலிவு விதைத்து விடுகிறது. இப்படி நலிவு ஏற்படும் போது ஒரு புது ஞானப்புயல் தீடீரென்று ஏற்படுகிறது. நலியும் நம் நம்பிக்கையை அது புதிதாக உந்துகிறது. இந்த உந்துதல் மனித சமுதாயத்தில் அடிக்கடி நிகழ வேண்டியிருக்கின்றது. அப்படி தோன்றிய ஒரு ஞானப்புயல் தான் சுவாமி விவேகானந்தர். அந்த ஞானப் புயல் 1893 செப்டம்பர் 11ம் நாள் அமெரிக்க விலுள்ள சிகாகோ நகரில் கூடிய சர்வ சமய பேரவையில் அவர் நிகழ்த்திய உரையை கீழே பகுதி பகுதியாக தருகின்றோம்.

இந்திய மண்ணில் ஒன்றன் பின் ஒன்றாக எத்தனையோ கிளை மதங்கள் உண்டாயின வேதநெறியின் அடித்தளத்தையோ அவை உலுக்கி விடும் தோன்றியது. ஆனால் பயங்கரமான நிலை நடுக்கம் ஏற்பட்டால் எப்படி கடலானது சிறிது நேரம் பின்னோக்கி சென்று பின்னர் ஆயிரம் மடங்கு சீற்றத்துடன் பெருகிவந்து அனைத்தையும் வளைத்து கொள்கின்றதோ அது போல எல்லா மதங்களும் ஆரம்ப ஆரவாரம் ஓய்ந்ததும் மிகப் பெரிதான தாய் மதத்தால் கவர்ந்து இழுக்கப்பட்டு அதனுள் இரண்டறக் கலந்து விட்டன.

அறிவியலின் இன்றைய கண்டு பிடிப்புக்கள் எந்த வேதாந்தத்தின் எதிரொலிகள் போன்று உள்ளனவே அந்த வேதாந்த தத்துவத்தின் மிக உயர்ந்த ஆன்மீக கோட்பாடுகள் முதல் பல்வேறு புராணக்கதைகள் கொண்ட மிகச் சாதாரண உருவ வழிபாட்டுக் கருத்துக்கள் பௌத்தர்களின் சூன்யவாதம் , சமணர்களின் நாத்திக வாதம் ஆகிய அனைத்திற்கும் இந்து சமயத்தில் உள்ளது.

அப்படியானால் ஒன்றுக் கொன்று மிகவும் வேறுபட்டிருக்கும் இவை அனைத்தும் ஒன்று சேரும் பொது மையம் எங்கே

இருக்கின்றது என்ற கேள்வி எழுகிறது ஒன்று சேரவே முடியாதது போல் தோன்றுகின்ற இவை அனைத்தும் ஒருங்கிணைவதற்கான அடித்தளம் எங்கிருக்கின்றது? இந்த கேள்விக்கு தான் நான் விடை கூற முயலப் போகின்றேன்.

தெய்வீக வெளிப்பாடான (Revelation) வேதங்களில் இருந்து இந்துக்கள் தங்கள் மதத்தை பெற்றுள்ளனர். வேதங்களுக்கு துவக்கமும், முடிவும் இல்லை என்பது அவர்கள் கூற்று. ஒரு நூலுக்கு துவக்கமே இல்லாதிருக்குமா? அது அபத்தம் என்று உங்களுக்கு தோன்றும். ஆனால் வேதங்கள் என்று குறிப்பிடுவது நூல்கள் அன்று வெவ்வேறு மக்களால் வெவ்வேறு காலங்களில் திரட்டிவைக்கப்பட்ட ஆன்மீக விதிகளின் கருவூலமே வேதங்கள் புவியீர்ப்பு விதி அது கண்டறியப்படும் முன்னரே இருந்தது. மனித இனம் முழுவதும் அதை மறந்து விட்டாலும் அது இருக்கும் அவ்வாறே ஆன்மீக உலகின் விதிகளும் ஓர் ஆன்மாவுக்கு இன்னோர் ஆன்மாவுக்கும் தனிப்பட்ட ஆன்மாக்களுக்கும் அனைத்து ஆன்மாக்களின் தந்தைக்கும் இடையே உள்ள தார்மீக, ஆன்மீக நிதிநெறி உறவுகள் அவை கண்டு பிடிக்க படுவதற்கு முன்னரும் இருந்தன நாம் அவற்றை மறந்தாலும் இருக்கும்.

தொடர்ந்து வளரும்............

மிருக நிலையில் இருப்பவரை மனித நிலையில் உயர்த்தி மனித நிலையில் இருப்பவரை தெய்வ நிலைக்கு உயர்த்துதே மதம்.

ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தர்

ஓம் ஜெய் சாயி ராம்

# (மூன்று தெய்வீக அவதாரங்கள்)

இந்த உலகில் தர்மத்தை மீண்டும் நிலைநாட்ட கடவுள் மனித உருவில் அவதாரம் செய்ய இருப்பதாக முன்னரே அறிவித்து இருக்கின்றார்.மனித உருவம் எடுப்பதனால் மனித குலமே அவரைச் சுற்றி வந்து அவருடைய அருகாமையும், அறிவுரைகளையும் பெற்று மகிழலாம் இறைவனுக்கு உருவமற்ற தன்மையிலிருந்து உருவத்துக் கும் உருவத்திலிருந்து உருவமற்ற தன்மைக்கும் மாறுவது எளிது.

மனித உருவம் என்பது உருவமற்ற கடவுளுக்கு ஒரு வெளிப்பாடு, ஒரு அடையாளம், ஒரு பிரதி நிதித்துவம் மட்டுமே அதனால் உருவமற்ற இறைவன் பல உருத் தோற்றங்கள் எடுத்து தன் சக்திகளை வெளிப்படுத்துகிறான். இது தெய்வத்தின் இயற்கை, இயல்பு சாதாரணமாக உலகியல் மனிதர்களிடையே நாம் காணும் சில மாறுபட்டவர்கள். மிக அறிவாற்றல் படைத்தவர்கள். கடவுள் தன்மை மிக்கவர்கள். உலகெல்லாம் உணர்ந்த மனிதர்கள் என்பவர்கள். இந்த வரிசையில் நாம் சேர்க்க வேண்டியதொன்று அவதார புருஷர் (மனித உருவில் கடவுள்) என்பது.

அளவற்ற முடிவற்ற மாறுபாடற்ற தத்துவம் இந்த உலகம் முழுவதும் பரவியிருக்கும் அந்த அதீத சக்தி கருணைக்கடல், உருவமற்ற அந்த அளப்பரிய அன்பு மனித குலத்தின் மேல் வைத்த கருணையால் மாயைத் துணை கொண்டு ஆனந்தப் பெருக்காய் அவதரித்து, உலக குருவாய் இந்தஉலக நாடகத்தை இயக்கும் இயக்குனராய் தன் பங்கை குறைவின்றி செய்கின்றது.



## ஷிரடிசாயி பாபா

28ம் திகதி செப்டம்பர் 1835 புனிதமான நாள் இந்த உலகின் நல்லோரின் வேண்டுகோளுக்கு பகவான் சீரடி சாயி பாபாவாக சாயி அவதாரத்தின் 3 அவதாரங் களில் முதலாவதாக இப் பூமிக்கு வந்தார். அவர் பரிபூரணமான

தெய்வீக ஆனந்தம் உயர்நிலையில் உள்ளவர் அவர் அவதார நோக்கத்தையும் அவரையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். சாயி அவதாரம் மூன்றுமுறை நிகழும் என ஏற்கனவே அறிவித்திருந்தது போல் முதல் அவதாரம் ஷிரடிசாயியாக சிவனுடைய ஸ்வரூபமாக அமைந்தது. இரண்டாவதாக இந்த வரிசையில் சிவசக்தி ஸ்வரூபமாக பகவான் சத்திய சாயி பாபா சத்தியத்தை நிலை நிறுத்துவதற்காகவும் மனிதனுள் உறையும் தெய்வீகத்தை தூண்டிவிடுவதறகாகவும் அவதாரம் செய்திருக்கின்றார். மூன்றாவதான பிரேம சாயி அவதாரம் சக்தி ஸ்வரூபமாக தெய்வீகத்தைப் பரப்புவதற்காக நிகழ இருக்கின்றது.

முதல் அவதாரமான ஷிரடிஸாயி பத்ரி என்கிற கிராமத்தில் கங்கா பாவடியா தேவகிரியம்மா என்கிற அன்பு தம்பதியருக்கு மகனாக அவதரித்தார். பல இடங்களுக்கு போய்விட்டு பிறகு ஷிரடி கிராமத்தில் 1858 லிருந்து அவரது மகாசமாதியான 1918 வரை நிரந்தரமாக தங்கினார்.

அந்த நாட்களில் பகவான் ஷிரடிபாபா தன் தெய்வீகசக்தியால் கடவுள் தன்மையால் பல பக்தர்களை தன்னருகில் இழுத்தார். அவருடைய வாழ்க்கை அவர் பக்தர்களுக்கு அன்புயுகம் பல பக்தர்கள், பல மதங்கள் சேர்ந்தவர்கள் மாறுபட்ட நம்பிக்கைகள் உடையவர்கள் பலலட்சக்கணக்கானவர்கள் தங்களுக்கும் மேல் ஒரு சக்தி இந்த பெரிய அண்டத்தை போஷித்து வருகிறது என்பதை உணரும்படி செய்யப்பட்டார்கள் அவருடைய போதனை மூலம்.

ஷிரடிசாயியின் மிக முக்கிய செய்தி நான் பக்தர்களுக்கு கேட்பதெல்லாம் தருகின்றேன். பிறகு இவர்கள் நான் தர இருப்பதை விரும்புவதாக என்பது ஆகும். தன்னுடைய வாழ்க்கை நிகழ்களாலும் அறிவுரைகளாலும் தான் சிவபெருமானின் அவதாரம் என்பதை தன் பல லட்சக்கணக்கான பக்தர்களுக்கு உணர்த்தி இருக்கின்றார். 1918ம் ஆண்டு தன்னுடைய மகாசமாதிக்கு முன்னர் தன்னுடைய சில பக்தர்களிடம் அன்னியோன்னியமாக குறிப்பிட்டு இருக்கின்றார் இன்னும் 8 ஆண்டுகளுக்கு பிறகு தான் மீண்டும் புட்டப்பர்த்தியில் பிறக்கப் போவதாக மொத்தத்தில் ஷிரடிஸாயி அவதாரம் தன்தெய்வீகத்தை நிலைநிறுத்தி பல இன மக்களிடையே நிலவி வந்த வேற்றுமைகளை களைந்தது.

தொடர்ந்து வரும்..........

# பிறப்பதற்கே வித்திட்டு இறக்கின்றோமே!

**இச்சுவை தவிரயான் போய்**
**இந்திர லோகம் ஆளும்**
**அச்சுவை தரினும் வேண்டேன்**
**அரங்கமா நகருள்ளாரே**

இந்திரலோகம் என்றால் அங்கே மனிதன் என்றும் இன்பமாக இருக்கலாம் என்று நாம் எண்ணிக் கொண்டு இருக்கின்றோம். அது தவறு அங்கு தேவர்கள் காணும் இன்பம் கூட நிரந்தரமற்றதே. நித்தியம் என்பது முக்தியே. இந்த முக்தியை மானிடப்பிறப்பு தவிர்ந்த வேறு எந்தப் பிறவியிலும் அடைய முடியாது. தேவர்களுக்கும் இது விதிவிலக்கல்ல.

ஜென்மாதி ஜென்மமாக இச்சித்ததன் விளைவே நாம் பெற்ற இந்த தேகம் ஒரு கர்ம கலைந்து கொண்டு இருக்கின்றது. அதுவந்த வேலையை அது செய்திடட்டும். தேகத்திலே நிகழுகின்ற கர்மத்துக்கும், தேகத்தில் இலக்குகின்ற ஆன்மாவாகிய எனக்கும் சம்மந்தமில்லை என்று சாட்சியமாக மட்டும் இருந்து விடுவோமானால் இறப்பு, பிறப்பு என்ற சாகரத்தினின்றும் தப்பித்து கொள்வோம்.

தேகம் நான் தேகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கு நானே கர்த்தா. அதன் பலன்களுக்கும் எனக்கே என்று மீண்டும், மீண்டும் அவாவி நின்றால் இதை அனுபவிப்பதற்கு வேறு ஒரு தேகம் தேவைப்படுகின்றது. ஏனெனில் தற்சமயம் உள்ள தேகம் முன்னர் ஜென்மாதி ஜென்மங்களாக அவாவி நின்றதனால் அனுபவிக்கப் பெற்ற ஒன்று அதன் நேர சூசிகை இப்போ அவாவி நிற்கும் ஒன்றிற்கு இடமளிக்க முடியாது. இதன் விளைவு அடுத்த ஜென்மம் இந்த தேகம் மடியும் முன்னரே அடுத்த ஜென்மத்திற்கு வித்திட்டு விடுகிறோம். இது நம் அறியாமை!

அ. குணபாலசிங்கம்
வோல்தம்ஸ்ரோ

# இயற்கை நமக்கு கற்பிப்பதென்ன?

## 1. ஆரஞ்சுப்பழம்:

ஆரஞ்சுப் பழத்தின் இனிய ரஸத்தை நாம் சுவைக்க வேண்டும். மாலை அதன் கசப்பான தோலை உரித்து விட்டு பழத்திற்குள் இருக்கும் கசப்பான விதைகளையும் வெளியே எறிந்து விட வேண்டும்.

அதுபோல் வாழ்க்கையில் உண்மையான மகிழ்ச்சியைப் பெற வேண்டும். மாலை இகந்தை (நான் என்ற உணர்வு) என்ற மேல் தோலை உரித்து விட்டு சினம் பொறாமை வெறுப்பு கர்வம் என்னும் விதைகளைக் களைந்தெறிய வேண்டும் அவ்வாறிருக்க நாமும் முயற்சிப்போமாக

## 2. எறும்பினைப் போல இரு

ஒரு சர்க்கரைக் கட்டியை பார்த்ததும் அதனைத் தனியாக உண்பதற்கு எறும்பு விரும்புவது இல்லை. அது அங்கு மிங்கும் அலைந்து அதனுடைய நண்பர்களையும் கூட்டிக் கொண்டு வருகிறது. ஏனெனில் தனக்கு கிடைக்கும் விருந்தினை மற்ற எல்லோருடனும் பகிர்ந்து உண்ண வேண்டுமென்று ஆசைப்படுகின்றது. அவ்வாறிருக்க நாமும் முயற்சிப்போம்.

## 3. தேனீயைப் போலிரு கொசுவைப் போலிராதே:

தேனீயானது இனிய தேனை ஒவ்வொரு மலரிலிருந்தும் எடுத்து சேகரித்து வைக்கின்றது. மக்கள் அதனை பயன்படுத்துகிறார்கள். கொசுவோ மனிதர்களிடமிருந்து இரத்தத்தை உறிஞ்சி அவனுக்கு வேறிடத்திலிருந்து பெற்ற நோய்களைப் பரப்புகிறது. நீயும் ஒவ்வொன்றிலும் உள்ள நல்லதை பார்ப்பதற்கும் நல்லதை சேகரிப்பதற்கும் முயற்சி செய்வோமாக.

## 4. ஈ நமக்கு என்ன கற்பிக்கின்றது:

வீட்டிலுள்ள ஈயானது நல்ல உணவுக்கும் கழிவுப் பொருளுக்கும் வேறுபாட்டினை உணர்வதில்லை. ஒரு கணம் உணவின் மேல் உட்காருகிறது. மறுகணத்தில் கழிவுப் பொருளின் மேல் உட்காருகிறது. மனிதர்களாகிய எம்முடைய மனமும் அப்படிப்பட்டதேயாகும். ஆகவே நாம் எச்சரிக்கையாக இருக்க முயற்சிப்போமாக

தொடரும்...........

# ஆத்ம பலம்

ஆத்ம பலம் என்பது மறைந்திருக்கும் எமது ஆண்டவனை அறியும் பலமே ஆத்ம பலம் எனப்படும். மற்றது உடம்பு பலம் என்றும் கூறலாம் அதை உலக வாழ்க்கை சம்மந்தப்பட்டதை அறியும் பலம் என்றும் கூறலாம்.

ஆத்மீக வாழ்க்கை, உலக வாழ்க்கை என்று அதை கூறுவர் ஆத்மீக பலத்தை தெளிவு படுத்த சமயங்கள் தோன்றின இறைவனும் அதை தெளிவு படுத்த பல மகான்களை அனுப்பியுள்ளார்.

ஆத்மீக பலத்தை என்ன முறையில் உபயோகித்தல் அதை எப்படி பெறுவது அதை எப்படி மற்றவர்களும் பெற வேண்டும் என்பது ஒவ்வொரு ஆத்மீகனும் வேண்டுகிறான். இந்த ஆத்மீக பலம் இந்த நாட்களில் குறைந்த வேகத்தில் சென்று ஆத்மா துன்பம் துயர், நோய் பலவற்றால் அல்லல்படுகின்றான்.

ஆத்மீக பலம் ஒளி, ஒப்பற்ற ஆனந்தம் ஆகியவற்றைக் கொண்டதாகும். இந்நிலையில் அது துன்பம் துயர் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு இறைவனை அறிந்த நிலையில் உடம்பு வேறு ஆத்மா வேறு என்ற உண்மை நிலையை அறிந்திருக்கும் ஆத்ம பலத்தை **ஆத்ம ஜோதி** என்ற சிறந்த சொல்லில் சொல்லலாம்.

இந்த நிலையில் பெற்ற அனுபவங்களை பாடல் வாயிலாக பெரும் பகுதியை கொடுத்தவர்கள் வாசகர், தாயுமானவர் ஆகிய சுவாமிகள் உலகில் என்ன முறையில் ஆத்ம பலம் ஒளி வீசுகிறது என்பதை மேலும் அறிவோம்.

தேவன்
வோல்தம்ஸ்ரோ

## ஆன்மீக முன்னேற்றத்திற்கு உங்கள் குழந்தைகளை கொண்டு வருவதற்கு ஒரு தாயின் கடமை (பங்கு) என்ன?

ஒரு குழந்தையின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தாயானவளின் கடமைகள், நாம் வாழும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை, அவர்களை நல்வழியில் அழைத்துச் செல்லக்கூடிய வகையில் எங்கள் ஆற்றலுக்கு ஏற்றவாறு நிறைவேற்றுகின்றோமா என்பதை, இங்கு சிந்தித்துப் பார்ப்போம்.

ஒரு தாயானவள் என்று தன் குழந்தையை வயிற்றில் தாங்கிக் கொள்கின்றாளோ, அன்று அவளுடைய கடமைகள் தொடங்குகின்றன. தாய் ஆனவுடன் தனது பிள்ளையின் ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்ற உணவுகள் பொழுது போக்குகள் ஆகியவற்றில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

1. நல்ல ஆரோக்கியமான முழுமையான (Wholesome) இயற்கையான உணவுகளைக் கூடுதலாகச் சாப்பிட வேண்டும். உதாரணமாக தானிய வகைகள், பருப்பு வகைகள் பால், பழம், மரக்கறி உணவுகள்.

2. நல்ல தொலைக்காட்சி, அறிவு நிறைந்த காட்சிகளைப் பார்க்க வேண்டும். மனத்திற்கு குழப்பம் தரும் சண்டைகள், சச்சரவுகள், நிறைந்த தொலைக்காட்சிகளைப் பார்க்கக் கூடாது.

ஏன் தாயாக இருக்கும் நாம் உண்ணும் உணவு பொழுது போக்குகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை இங்கு ஓரளவு விளக்கம் காண்போம்.

நாம் உண்ணும் உணவு பொழுது போக்குகள் ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தன.

இத்தகைய கருத்துக்கள் எங்கள் ஆன்மீக புராணங்கள், இதிகாசங்கள், எடுத்துச் சொல்லுகின்றன. மகான்கள். முனிவர்கள் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்கள் திட்டவட்டமாக எங்கள் உணவு, பொழுது போக்குகள் எங்களைப் பாதிக்கும் தாயாக இருப்பவருக்கு அவளுடைய குழந்தையும் இதனால் பாதிக்கப்படும். அதனால் நாங்கள் உண்ணும் உணவு பொழுது போக்குகளினை எங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்றவாறு தெரிந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. நாம் உண்ணும் உணவு எங்கள் மனதை உருவாக்கும். உணவுக்கு ஏற்றவாறு எங்கள் மனம் (Personality) உருவாகும். இதனை விஞ்ஞான ரீதியாகவும் ஆராய்ந்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமிச உணவுகளை விட தாவர உணவுகள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. தாவர உணவுகள் உண்பதினால் ஓரளவு நோய் நொடி இல்லாமல் வாழலாம். மாமிச உணவு உண்பதிலும் தாவர உணவுகள் குழந்தையின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். மாமிச உணவுகள் உண்பதால் ஏற்படும் சில கெடுதலை இங்கு காணலாம்.

1. எங்கள் உறுப்புக்கள் சிறுநீரகம் – நாங்கள் உண்ணும் மாமிச புரதங்களில் ஏற்படும் நைதரஜன் கழிவுகளை வெளியேற்றுவதற்கு கூடுதலாக தொழில்புரிய வேண்டும்.

2. மற்றும் எங்கள் உடம்பில் (Toxins) ஆகியவற்றை கூடுதலாக உண்டாக்கும்.

3. இறைச்சி வகைகள் உண்பதால் எங்களுக்கு Aggressive

Mood Tension ஆகியவற்றை உண்டாக்கிறது. மரக்கறிகள் பழம் சாப்பிடுவதால் எங்கள் மனதிற்கு ஓர் அமைதியை தருகிறது. (Calmless, Peace) நாம் உண்ணும் உணவு ஆன்மீக வளர்ச்சிக்கு உதவக் கூடியதாக இருக்க வேண்டும். இதனைப் பற்றி பகவத் கீதை விளக்கமாக கூறுகிறது. எனவே, சிறுவயதிலே குழந்தைகளுக்கு மரக்கறிகள் கீரைவகைகள், பருப்பு வகைகள் ஆகியவற்றை உணவாக கொடுத்து பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் 1 – 5 வயது மட்டும் தாயின் கவனிப்பில் இருந்தால் குழந்தையின் பழக்கவழக்கங்களில் அக்கறை செலுத்த முடியும். அந்த இளம் வயதில் நல்ல பழக்கவழக்கங்களை உண்டு பண்ணுவது இலகுவாக இருக்கும். பிறரால் பராமரிக்கப்படும் போது தாயின் உரிமையுடன் பிள்ளையை கண்டித்து வளர்க்க மாட்டார்கள். அவர்களின் பழக்க வழக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் எனவே, குழந்தையானது தாயுடன் வளர்வதே மிகவும் சிறந்தது. தாய்மார்கள், பொருளாதார கஸ்டத்தினால் வேலைக்கு போவதினால் குழந்தைகளின் மனநிலை பழக்க வழக்கங்கள் பாதிக்கப்படுகின்றன. வேலைக்கு போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் போது குழந்தைகள் உறவினரால் பாதுகாக்கப்படுவது நல்லது.

தாய் தனது குழந்தைக்கு இயற்கையின் அறிவைப் புகட்ட வேண்டும். இயற்கையுடன் சேர்ந்து வாழப் பழகிக் கொடுக்க வேண்டும். இயற்கை – நிலம், நீர், காற்று, மரம் ஆகியவற்றின் அறிவுகளை விளக்கம் கொடுக்க வேண்டும். மற்றும் இறைவன் ஒருவர் உள்ளார். அவர் எங்களுக்கு மேலான ஒருவர் அவர் எல்லாம் வல்லவர். எங்கும் நிறைந்தவர் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும். அவராலே, இவ்வுலகம் உருவாக்கப்பட்டது. மற்றும் இயற்கை விதிகளைப் பற்றி இளம் வயதிலே போதிக்கப்பட வேண்டும்.

இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும். மற்றும் சீவிக்கும் எல்லா ஜீவராசிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும்.

எது தர்மம், அதர்மம், நியாயம், அநியாயம் என்பதை பிரித்து அறியப் பழக வேண்டும்.

பெரியோருக்கு மரியாதை கொடுத்தல், மற்றவர்களின் வழியில் குறுக்கிடாமல் இருத்தல், மனச்சாட்சிக்கு சரியானவற்றைச் செய்தல் ஆகியவற்றை குழந்தைகளுக்கு தாயனவள் நீதிக்கதைகள் மூலம் மனதில் பதியச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

முன்பு வாழ்ந்த மகான்கள் ஸ்ரீ ராம கிருஸ்ணர் ஞானப் பேரொளி விவேகானந்தர் ஆகியவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆன்மீகம் என்றால் என்ன என்பதையும் கடவுள் ஒருவர் அவரை எவ்வுருவிலும் வணங்கலாம் எல்லா மதங்களும் கடவுளை அடையும் வழியைப் போதிக்கின்றன என்பதையும் அவற்றில் உள்ள உண்மைகளையும் விளக்கம் கொடுக்க வேண்டும்.

தாய் குழந்தைகளுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். தாய் எதனை செயகின்றாளோ அதனையே குழந்தையும் செய்ய விரும்பும். ஆகையால், நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கு வழிகாட்டியாகவும், அவர்களுக்காக எங்களுடைய விருப்பங்களை தியாகம் செய்ய பழகிக் கொள்ள வேண்டும்.

இச்சிந்தனைக் குறிப்பை சுவாமி பகவான் சத்தியசாயி பாபாவின் அறிவுரையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது.

Mrs நடராசா
வோல்தம்ஸ்ரோ

இன்னும் வளரும்.......

அன்புமிக்க ஆன்மீக நெஞ்சங்களே!

புது வருடமும் பிறந்து விட்டது. புது வருட வாழ்த்துக்களை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்ளும் இவ்வேளையில் நாம் கடந்த கால வாழ்க்கையில் அதுவும் ஆன்மீக பாதையில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கின்றோம் என்பதை ஒரு கணமாவது ஒவ்வொருவரும் சிந்தித்து பார்ப்போமா? நாம் ஒவ்வொருவரும் சிந்திப்பதால் நாம் ஆன்மீக பாதையில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கின்றோம்? எவற்றில முன்னேற்றம் இல்லை? அதற்கான காரணம் என்ன? நாம் நமக்கு நாமே கேள்விகளை கேட்டறிந்து ஆன்மீக பாதையில் தடையாக இருப்பவை எவை? அவற்றை எப்படி வெற்றி கொள்வது என்பதை சிந்தித்து ஆன்மீக பாதையில் வரும் தடைகளை வெற்றி கொள்வோம் என்பதை இப்புது வருடத்திலாவது சபதம் எடுப்போம். முக்கியமாக கருதப்பட வேண்டிய ஏழு விடயங்களை கீழே குறிப்பிட்டு இருக்கின்றோம். அனைவரும் ஆன்மீக பாதையில் முன்னேற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை நாமும் பிரார்த்திக்கின்றோம்.

1. ஒவ்வொரு நாளும் நாம் நமது பாதையில் எந்த அளவு முன்னேறி இருக்கின்றோம் கடவுளை நோக்கி நாம் நேற்றைய விட இன்று எவ்வளவு நெருங்கி இருக்கின்றோம் என்ற சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

2. கடவுளின் நினைவு அதிகரிப்பதும் இறை நினைவில் மேன் மேலும் இனிமை தோன்றுவதும் இறைவன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் விருப்பமுண்டாவதும் உலக சம்பந்தமான சர்ச்சைகளில் வெறுப்பு தோன்றுவதும் நாம் முன்னேறுவதற்குள்ள அறிகுறிகளாகும்.

3. ஒவ்வொரு நாளும் நாம் நமது மனமும் ஐம்புலன்களும் பகவானின் வேலையில் ஈடுபட்டு இருக்கின்றனவா? இல்லையா? என்பதை கவனிக்க வேண்டும் மனம் ஈடுபடுவது என்பதற்கு அடையாளமாக மனக்கண்ணில் சில சமயங்களில் இறைவன் அமர்ந்திருப்பதாக சில சமயங்களில் நிற்பதாக மற்றும் சில சமயங்களில் நம்முடன் பேசுவதாக தோன்ற வேண்டும். ஐம்புலன்கள் ஈடுபடுவதற்கு அடையாளமாக நாவால் இவனது திருநாமத்தை உச்சரிக்க வேண்டும். உடலின் ஒவ்வொரு அங்கத்தின் அசைவும் இறைவனுக்காகவே இருக்க வேண்டும்.

இறைவன் தனது வேலைகளை என் மூலம் செய்விக்கின்றார் என்று எண்ண வேண்டும். இறைவன் தீய செயல்களை செய்ய ஒரு போதும் கூறுவதில்லை என்பதால் மிகவும் கவனமாக இருப்பது அவசியமாகும். மனதில் தோன்றும் ஆசை, கோபம் போன்ற அசுத்தமான எண்ணங்கள் நம்முடைய குணங்கள் ஆகும். ஆசைகளற்ற, கோபமில்லாத மேலும் இறை நினைவை ஏற்படுத்தும் தூய்மையான எண்ணங்கள் இறை அருளால் தோன்றுபவை ஆகும். இறைவனால் தூண்டப்பட்ட நல்ல எண்ணங்களால் நாம் சந்தோசம் அடைவதுடனும் அவற்றை செயலில் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும்.

4. எப்பொழுதெல்லாம் இறை நினைவு வருகின்றதோ அப்பொழுதெல்லாம் அந்த நினைவாக வந்திருப்பது கடவுளே என்று எண்ண வேண்டும. இவ்வாறு வரும் இறைவன் வருவது போல் திரும்பி சென்று விடுவார். அதனால் இப்போது நான் அவரை விடமாட்டேன் மேலும் இறுகப் பிடித்துக் கொள்வேன். அவருடைய மனதில் பேசுவேன் மேலும் அவரது எழில் கொஞ்சும் வடிவத்தை பார்த்தபடி என்னையே மறந்து நிற்பேன். என்று சிந்திக்க வேண்டும. இதுவே அவரை சிக்கெனப் பிடிக்கும் வழியாகும்.

5. எப்போது இவ்வாறு நம்மிடம் வந்த இறைவனை நாம் வரவேற்கின்றோமோ அப்போது அவர் அடிக்கடி நம்மிடம் வருவார். நாம் அவரிடம் எங்கும் செல்லாது இங்கேயே இருக்க வேண்டும் என பிரார்த்தித்தால் அவர் திரும்பிச் செல்லாது நம்முடனேயே இருந்து விடுவார்.

6. மனதில் ஏதாவது சிறிய சஞ்சலம் ஏற்பட்டால் கூட நாம் அதனை உடனே இறைவனிடம் கூறிவிட வேண்டும். கூறியபின் கவலையற்று இருக்கலாம். நம் இறைவன் தாமே மிகச் சிறந்த முறையில் நமது கவலைகளை தீர்த்து வைப்பார்.

7. மனதில் கடவுள் மட்டுமே எனக்குரியவர் நான் அவருக்கே சொந்தமானவன் என எண்ண வேண்டும். எப்படி ஒரு குழந்தை தாயிடம் மனைவிக்கு கணவன், ஒருவனுக்கு தனது தோழனிடம் அதிகாரம் இருக்கின்றதோ அதேபோல் எனக்கு என் இறைவனிடம் என் இறைவனுக்கு என்மீதும் அதிகாரம் உண்டு. ஏனெனில் நான் இப்பொழுது உலகத்துக்குரிய பொருளல்ல என் இறைவனுக்கு மட்டுமே சொந்தமான பொருளாகும் என எண்ண வேண்டும்.

க. பிரகாஷ்

# மகா பாரதம்

இந்திய மண்ணுக்கு பெருமையை தேடி கொடுத்தவரும் ஞானபேரறிவுமாகிய சுவாமி விவேகானந்தர் கலிபோர்னியாவில் பாசதேனா ஷேக்ஸ்பியர் கழகத்தில் 1900 பிப்ரவரி முதல் நாளன்று ஆற்றப்பட்ட சொற்பொழிலை பகுதி, பகுதியாக தருகின்றோம்.

நான் இன்று மாலை வேளையில் ஒரு இதிகாசத்தை பற்றி பேசப் போகின்றேன். அதன்பெயர் மகாபாரதம் பாரத மனண்ணிலிருந்து தோன்றிய வம்சத்தின் கதை இது. துஷ்யந்தனுக்கும், சகுந்தலைக்கும் பிறந்தவன் தான் பரதன். மஹா என்றால் பெரிய என்று பொருள் பாரதா என்றால் பரதனின் சந்ததிகள் என்று பொருள் இந்தியாவுக்குப் பாரதம் எனும் பெயர் இந்த பரதமிருந்து தான் வந்தது. மகாபாரதம் என்றால் பெரிய இந்தி அல்லது பரதனின் பெரிய சந்ததியரின் கதை என்று பொருள்.

இந்த இதிகாச காட்சி நடந்த இடம் குரு வம்சத்தினரின் பழைய நாடாகும். கதையே குருவம்சத்தினருக்கும் பஞ்சபாண்டவருக்கும் இடையே நடந்த பெரிய போரை அடிப்டையாகக் கொண்டது. ஆகவே சண்டை நடந்த இடம் மிகப் பெரிய தல்ல.

இந்த இதிகாசம் இந்தயாவில் பொது மக்களிடையே பெரிதும் வழங்கப்படுகின்றது. கிரேக்கர்கள் மீது ஹோமரின் கவிதைகள் எவ்வளவு செல்வாக்கு பெற்றுள்ளதோ அவ்வளவு செல்வாக்கை இது இந்தியரிடையே பெற்றுள்ளது. நாட்கள் செல்லச் செல்ல இதில் பல செய்திகள் சேர்க்கப்பட்டன. இப்போது அது ஒரு பெரிய புத்தகமாகி விட்டது. கிட்டத்தட்ட இலட்சம் சுலோகங்கள் இதில் உள்ளன. அவ்வப்பொழுது பல கதைகள், கட்டுக் கதைகள் புராணக் கதைகள், தத்துவ ஆராய்ச்சிகள் சரித்திரதுணுக்குகள் முதலியன சேர்க்கப்பட்டு இப்பொழுது அது மிக பெரிய இலக்கியமாகி விட்டது. மகா பாரதத்தின் மையக்கதைகள் இரண்டு பங்காளி குடும்பங்கள்

செய்த போரை பற்றியது. ஒரு குடும்பத்தினர் கௌரவர்கள் என்றும் இன்னொரு குடும்பத்தினர் பாண்டவர்கள் என்று குறிப்பிட்டனர்.

சிறுசிறு கூட்டங்களாக ஆசிரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தார்கள் நாளடைவில் இந்த கூட்டங்கள் பெருகி இறுதியில் அவர்கள் இந்தியாவின் ஆட்சியாளர்கள் ஆனார்கள் முடிவில் ஒரு குடும்பத்தின் இரு பிரிவினருக்குமிடையே யாருக்கு ஆதிக்கம் உரியது என்பதை நிலைநாட்ட போர் எழுந்தது. உங்களில் கீதையை படித்தவர்கள் இரண்டு சேனைகள் ஒன்றையொன்று எதிர்த்து அணிவகுத்து நிற்கும் போர் களத்தின் வர்ணனையுடன் அது ஆரம்பமாகிறது. என்பதை அறிவீர்கள் அதுதான் மகாபாரதப் போர்.

ஒரு சக்கரவர்த்திக்கு இரண்டு மைந்தர்கள் இருந்தார்கள். பெரியவனுக்கு திருதராஷ்டிரன் என்றும் இளையவனுக்கு பாண்டு என்றும் பெயர். திருதராஷ்டிரன் பிறவிலேயே குருடன் இந்திய சட்டப்படி குருடனோ நொண்டியோ, வேறு ஊனப்பிறப்பானோ அரசாள முடியாது. அவன் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பொருள் மட்டும் கொடுக்கப்படும். ஆகவே திருதராஷ்டிரன் மூத்த மகனாக இருந்தும் அரியாசனம் ஏறமுடியவல்லை. பாண்டு சக்கரவர்த்தி ஆனான்.

தொடரும்.......

இந்த உலகம் ஒரு புத்தகம் என்பதையும் அதைப் படிக்கின்ற வேலை மட்டுமே நம்முடையது என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அந்த புத்தகத்திலிருந்து நமக்கு வேண்டிய ஞானத்தை நாம் பெற்றுக் கொண்ட பிறகு அந்தப் புத்தகத்தால் நமக்கு பயனேதும் இல்லை.

ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தர்

# மதுரை

மதுரை பாண்டிய மன்னர்களின் தலை நகராக திகழ்ந்தது. இப்புண்ணிய பூமியை மதுரை என்றும் நான் மாடக்கூடல் என்றும் அழைக்கின்றோம். புண்ணிய ஆறு வைகையின் கரையின் மீது அமைந்திருப்பதால் இது செழிப்பானதாக இருக்கின்றது. குண்டோதரன் என்ற பெயருடைய அரக்கனின் தாகத்தைப் போக்கு முகத்தான் சிவனாரின் அருளினால் கங்கை பேராறாக ஓடுகின்றது. முதலில் கடலில் சங்கமம் ஆகிக் கொண்டு இருந்தது. ஆனால் தற்சமயம் கடலில் சங்கமம் ஆவது இல்லை. சிவனாரின் சடையில் இருந்து வெளிவந்ததால் சிவகங்கை என்றும் ஞானத்தைப் போதித்ததால் சிவஞான தீர்த்தம் என்றும் காற்றைப் போன்று விரைவாகப் பாய்வதால் வேகவதி என்றும் பெயர் பெற்று விளங்குகூறது வைகை ஆறு.

மதுரை தமிழ்மொழியை வளர்த்த நகரம் ஆகும். சங்ககால கவிஞர்கள் இதே நகரத்தில் தமிழ் இலக்கியத்தை ஆராய்ந்தார்கள். இன்றும் நடக்கின்றது. ஆகையால் தமிழ் மதுரை என்றும் தமிழ் கடல் என்றும், சங்கத்தமிழ்கடல் என்றும் முச்சங்க வளக்கடல் என்றும் விரிதமிழ் கடல் என்றும் முத்தமிழ் மதுரை என்றும் கூறுகின்றோம். மதுரை நகரத்தின் பெருமையை விளக்கும் பல நூல்கள் தமிழ் மொழியில் உள்ளன அவைகளில் பரிபாடல் ஒன்று ஆகும். இதில் மதுரை நகரத்தின் அமைப்பு பற்றி தாமரை மலரோடு ஒப்பிட்டு இருக்கின்றது. ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் மலரின் அண்ட கோசம் என்றும், அதன் இதழ்கள் நகரத்தின் தெருக்கள் என்றும் வர்ணனை செய்யப்பட்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட புகழ் பெற்ற மதுரையில் ஒரு உலகப் புகழ் பெற்ற கோவில்தான் மீனாட்சி கோவில் என்று அழைக்கப்படுகின்றது.

மீனாட்சி மதுரையில் பார்வதி தேவி பாண்டிய மன்னனின் மகளாக அவதரித்து மக்களை காப்பாற்றுகிறாள் என்றும் காப்பாற்றுவாள். தேவி கொஞ்ச காலம் பாண்டிய அரசையும் ஆண்டார். பிறகு

கைலாசநாதர் சிவனாரைத் திருமணம் செய்து கொண்டார். பார்வதிதேவி தன் மீன் போன்ற கண்களால் மீனாட்சிதேவி என்று சொல்லப்படுகின்றார்.

அஷ்ட சக்திமண்டபம் இந்த மண்டபம் கோவிலின் முற்பகுதியில் அமைந்து இருக்கின்றது. மண்டபத்தின் எட்டு சக்திகளின் சிலைகள் பொலிவோடு விளங்குகின்றன. வாயிலில் விநாயகர், முருகன் மீனாட்சி அம்மன் திருமணத்தை குறிக்கும் சிலைகள் இருக்கின்றன தெற்கு பக்கம் கௌமாரி, ரௌத்ரி, வைஷ்ணவி மகாலெக்ஷமி மேலும் வடக்கு பக்கத்தில் யட்சனி சியாமளி, மகேஸ்வரி, மனோன்மணி ஆகிய தேவிகளின் சிற்பங்கள் வெவ்வேறு தூண்களில் திறமையாக செதுக்கப்பட்டு இருக்கின்றன. இம்மண்டபத்தில் மீனாட்சிஅம்மனின் வரலாறு எழுதப்பட்டு இருக்கின்றது. இங்கே மீனாட்சி அம்மனின் பிறப்பிலிருந்து அவருக்கும் சிவனாருக்கும் திருமணங்கள் நடக்கும் வரை உள்ள ஓவியங்கள் உள்ளன.

மீனாட்சி நாயக்கர் மண்டபம் மீனாட்சி நாயக்கர்களால் கட்டப்பட்ட இந்த மண்டபத்தில் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்ட தூண்வரிசைகள் ஆறு இருக்கின்றன. அஷ்டசக்தி மண்டபத்திற்கும் மீனாட்சி நாயக்கர் மண்டபத்திற்கும் இடையில் சிறிய மண்டபம் இருக்கின்றது. அதில் சிவனாரும் பார்வதி, வேடன் வேடுவச்சி வேடத்தில் தரிசனம் கொடுக்கின்றார்கள். மண்டபத்தில் மேற்குபகுதியில் ஆயிரத்தெட்டு பித்தளை எண்ணெய் விளக்கு வரிசைகள் இருக்கின்றன. அவை பார்க்க மிக அழகாக இருக்கின்றன.

இன்னும் வளரும்......

உண்மையான சமூகத் தொண்டென்பது இரண்டு முக்கிய குணாதியங்களான கருணையுள்ளமும், தியாக மனப்பான்மையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தர்

# இராமாயணம்

(கலிபோர்னியாவில் பாஸதேனஷேக்பியர் கழகத்தில் 1900 ஜனவரி 31ம் நாள் ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தரால் ஆற்றப்பட்ட சொற்பொழிவு)

மிகவும் பழமை வாய்ந்த இரண்டு இதிகாசங்கள் சமஸ்கிருத மொழியில் உள்ளன. இன்னும் நூற்றுக்கணக்கான காப்பியங்கள் சமஸ்கிருத மொழியில் இருக்கின்றன. சமஸ்கிருதம் இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பேசும் மொழியாக இல்லையென்றாலும் அந்த மொழியும் அதன் இலக்கியமும் தொன்று தொட்டு இன்று வரை விளங்கி வருகின்றன.

இராமாயணம், மகாபாரதம் என்று வழங்கப்படும் இரண்டு பெரிய இதிகாசங்களைப் பற்றி நான் இப்போது பேசப் போகின்றேன். பழங்கால இந்தியர்களின் பழக்க வழக்கங்கள், சமூக நிலை, நாகரீகம் எல்லாம் இவற்றில் காணப்படுகின்றன.

இந்த இரண்டில் மிகப் பழையது **இராமாயணம்**. அதாவது இராமனின் வாழ்க்கை வரலாறு இதற்கு முன்னரே இந்தியாவில் கவிதை இலக்கியத்தில் இருந்திருக்கின்றது. இந்துக்களின் புனித நூல்களான வேதங்கள் ஒரு வகையான கவிதை நடையிற் தான் எழுதப்பட்டிருந்தன. இருந்தும் இந்த நூல் தான் கவிதையின் ஆரம்பம் என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது.

இதை எழுதிய கவிஞரின் பெயர் வால்மீகி முனிவர். பிற்காலத்தில் இவரைப் பற்றிப் பல கற்பனைக் கதைகள் புனையப்பட்டன. பிற்காலத்தில் இவர் இயற்றாத பல கவிதைகளையும் இவர் இயற்றியதாகச் சொல்வது பழக்கமாகி விட்டது. இந்த இடைச் செருகல்கள் எல்லாம் இருந்தும் இராமாயணம் மிக அழகான நூலாக விளங்குகிறது. உலகிலேயே அதற்கு ஒப்பானது எதுவுமில்லை என்று கூறப்படுகின்றது.

இன்னும் வளரும்........



## ஸ்ரீ ரமண மஹர்ஷி

பாரத நாட்டின் புண்ணிய தினங்களில் ஆருத்ரா தரிசனம் மிகவும் விசேசம் வாய்ந்தது. கௌதமர் பதஞ்சலி போன்ற பக்த சிரேஷ்டருக்கு சிவபெருமான் காட்சி யளித்த இப்புனித நாளன்று 1879ஆம் வருஷம் டிசம்பர் மாதம் இருபத்தொன் பதாம் தேதி இரவு ஒரு மணிக்கு ஸ்ரீ ரமண மஹர்ஷி அவதரித்தார்.

அவர் பிறந்த ஊர் திருச்சுழி. மதுரை ஜில்லாவில் ஓர் கிராமம். இவரது தந்தை ஸ்ரீ சுந்தரம் ஐயர் கண்ணியமான வக்கீல் தொழில் நடத்தி வந்தார். அவருக்கு மூன்று புதல்வர்கள் இரண்டாவது குழந்தையாகிய ரமணருக்கு வேங்கட ராமன் என்று நாம கரணம் செய்தனர்.
அக்ஷிராப்யாசமானதும் குழந்தை வெங்கட் ராமனை உள்ளூர் பள்ளிக் கூடத்தில் சேர்த்தார்கள். பின்னர் திண்டுக்கல் சென்று ஒரு வருஷம் ஐந்தாவது வகுப்பில் படித்தார். இதற்கு பின் மதுரைக்கு போய் ஸ்காட்ஸ் பிடில் ஸ்கூலிலும் மிஸன் ஹைஸ்கூலிலும் வசித்தார்.

பள்ளிப் பிராயத்தில் எல்லாம் வருங் காலத்து மகிமையை குறிக்கும் அறிகுறிகள் எதுவும் அச்சிறுவரிடம் கானப்படவில்லை. வகுப்பிலே அபார அறிவுடன் பிரகாசிக்கவில்லை.
மகாபுத்திசாலியென்று பேரும் எடுக்க வில்லை. நல்ல வலுவான உடலுறுதி உண்டு இதைத் தவிர மற்ற சிறுவர்களை விட எவ்வித்த்திலும் அவர் சிறந்து விளங்கவில்லை.

பதினாறு வயதுவரை இப்படிப் படிப்பில் கழிந்தது. 1895 ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் அவரது வாழ்வில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. ஊரிலிருந்து உறவினர் ஒருவர் வந்திருந்தார். எங்கிருந்து வருகிறீர்கள் என்று வேங்கடராமன் க்ஷேமம் விசாரித்தார். அருணாசலத்தில் இருந்து வருகின்றேன்

என்று பதில் வந்தது. அது அவரை பரவசப்படுத்தியது. சிறுவயது முதல் உள்ளத்தில் தானே ஒலித்துக் கொண்டிருந்த அருணாசலம் என்னும் ஏதோ ஒன்று பூமியிலேயுள்ள ஓர் தலம் மலை என்னும் உரையை கேட்டு அவர் ஆச்சரியம் முற்றார். ஆனால் அவர் அதைப் பற்றி ஒன்றும் நினைக்கவில்லை.

இதன் பிறகு ஒரு நாள் பெரிய புராணம் என்னும் நூல் ஒன்று கிடைத்தது. அதிலடங்கிய நாயர்மார்களுடைய திவ்விய சரித்திரங்கள் அவரது உள்ளத்தை கவர்ந்தன. ஆயினும் இந்த அனுபவங்கள் கூட அவர் மனதில் ஆழப்பதியவில்லை. கடைசியாக 1896ஆம் ஆண்டு தான் திடீரென ஒரு மாறுதல் ஏற்பட்டது.

ஒரு நாள் வேங்கடராமன் தனது சிறுய தந்தை வீட்டு மாடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். உடலிலே நோய் ஒன்றும் இல்லை. ஆனால் திடீரென்று ஏதோ ஒரு வித பயம் உள்ளத்தில் எழுந்தது. தான் மரணத்தறுவாயில் இருப்பதாக சிறுவருக்கு தோன்றியது. ஆனால் பெரியவர்கள் ஒருவரிடமும் இதை அவர் சொல்லவில்லை. தானே இதைத் தீர்த்துக் கொள்ள துணிந்தார். பிற்காலத்தில் இதை விவரிக்கும் பொழுது ஸ்ரீ மஹர்ஷிகளே பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

திடீரென்று ஏற்பட்ட இச்சம்பவம் என்னை தீவிர யோசனையில் ஆழ்த்தியது. சரி சாவு நெருங்கி விட்டது. சாவு என்றால் என்ன? எது சாகிறது? இந்த உடல் தானே செத்துப் போகிறது? என்று எனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டு உடனே மரண பவத்தை ஏகாக்கிரமாய் பாவித்து பார்த்தேன்.

பிணம் போல விறைக்குமாறு கைகளை நீட்டிப் பார்த்தேன். சரி இந்த உடம்பு செத்து விட்டது, என்று உள்ளுக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். இதை மயானத்திற்கு கொண்ட போய் எரித்து விடுவார்கள். இது சாம்பலாய்ப் போகும் ஆனால் இந்த

உடல்தான் நானா? இந்த உடல் சப்தமற்று, சலனமற்றுக் கிடக்கிறது. ஆனால் இந்த உடலுக்கும் அப்பாற் கூட நான் என்ற சொருபத்தான் சக்தியும் தொனியும் ஒலிக்கிறதே! ஆகவே நான் தான் ஆத்மா உடலுக்குள் கட்டுப்படாத ஒரு வஸ்து என்ற முடிவுக்கு வந்தேன். இதெல்லாம் வெறும் மனத் தோற்றமல்ல. நிதர்சனமாக உண்மை அனுபவமென்று தெளிவாய் விளங்கியது.

இந்த அனுபவம் அரை மணிக்குள் நடந்தேறி விட்டது. மரணபயம் பறந்து போய் விட்டது. அவரது மனம் ஆத்மயானத்தில் ஆழ்ந்து படிப்பை சிறிதும் நாடவில்லை. வீட்டில் உள்ளவர்களை நினைக்கவில்லை. விளையாடலும், சண்டையும்,மறைந்தன. எதிலும் பற்றில்லை. சாந்தமும் வணக்கமும் நிறைந்தவரானார். உணவைப் பற்றிச் சிறிதும் கவலையில்லை. நல்லதோ, கெட்டதோ கிடைத்ததை ருசித்து, மணம் ஒன்றையும் கவனியாமல் சாப்பிடலானார்.

கோவிலுக்கு போவதிலே புதிய சிரத்தை ஏற்பட்டது. இதற்கு முன்பெல்லாம் எப்போதாவது ஸ்ரீ மீனாட்சியம்மன் சன்னிதிக்கு போவதென்றால் தமாஷாக சிநேகிதர்களுடன் போய் விட்டு வருவது வழக்கம். பிறந்த வளர்ந்த வீடு, திருச்சுழி. இவ்வீடு இப்போது ஆச்சிரமத்தின் ஸ்வாதீனமாய் சுந்தர மந்திரம் என வழங்கி வருகிறது. இங்கு ஸ்ரீ பகவான் படம் பிரதிஸ்டையாகி தினமும் பூஜை முதலியவை நடந்து வருகின்றன. பக்தர்களுக்கு இது ஒரு யாத்திரை ஸ்தலமாயிருக்கின்றது. ஆனால் இப்போது அப்படியில்லை நாள் தவறாது, தனியே கோவிலை அடைந்து அம்மன், சுவாமி ஸ்ரீ நடராஜர் அறுபத்துமூவர் சன்னிதிகளில் நீண்ட நேரம் தொழுது விட்டுவருவார்.

இன்னும் வளரும்.........

## ஜெய் சாயிராம் 01.01.1997

பகுதி I

பக்தியில் கோர்த்த நல்முத்துக்களே! அன்பின் திருவுருவங்களே!! அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

நான் யார்? நான் ஏன் மானிடப் பிறவி எடுத்தேன்? நான் நாளை இறந்து விடுவேனா? அப்படியானால் ஏன் பிறக்க வேண்டும்? சந்தோசத்தை மட்டுமே ஏன் என் மனம் நாடுகிறது இன்பமும் துன்பமும் மாறி, மாறி வரும் என்கிறார்கள். அப்படியானால் ஏன் துன்பத்தை சந்திக்க என்மனம் தயங்குகிறது? எனது தாய் தந்தையோர் எனக்கு என்ன செய்தார்கள்? எனது கிராம மக்கள் எனக்கு என்ன செய்தார்கள்? எனக்கு நான் பிறந்த தாய் நாடு என்ன செய்தது? நாம் எல்லோரும் சற்று சிந்தித்துப் பார்ப்போம். இதே கேள்வியை இயற்கை எம்மை பார்த்து கேட்டால் எம்மால் பதில் சொல்லமுடியுமா?

ஆற்று நீர் எப்பொழுதும் ஓடிக் கொண்டே இருக்கின்றது. அதனால் ஆற்று நீர் ஆற்றுக்கு பயன்படாமல் பிறருக்குப் பயன்படுகிறது. மரம் பழங்களையும், நிழலையும் தருகின்றது. ஆனால் பழங்களை அந்த மரம் உண்பது இல்லை. அதன் நிழலும் அதற்கு பயன்படுவது இல்லை. பிறருக்காக இயற்கை செய்யும் சேவைதனைப் பார்த்தீர்களா? இயற்கை ஒரு ஆசிரியனாக இருந்து நமக்கு கற்பிக்கும் பாடத்தை நாம் ஏன்? சிந்துத்துப் பார்ப்பதில்லை? நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகிக் கொண்டு இருக்கின்றது எனியும் நாம் உறங்கலாமா? சிந்தித்துப்பார்ப்போம். நாம் மானிடப் பிறவி எடுத்த நோக்கத்தை செயல்படுத்துவோம். ஞானச்சுடர் சுவாமி விவேகானந்தரைப் போல நல்ல வழிகாட்டிகளாக.

**அன்பின் திருவுருவங்களே!**

நாம் எல்லோரும் பரிபூரண ஆன்மாக்களே பல பிறவிகளின் அனுபவத்தின் பின் மானிட பிறவி கிடைக்கின்றது. இப்பிறவியை வீணடித்தால் மீண்டும் எண்ணற்ற பிறவிகளில் காலத்தை கழித்த பின் தான் மானிடப்பிறவி ஏற்படுகின்றது. இந்த உண்மையை தர்க்க அறிவுக்கு அப்பால் கடந்து செல்லும் போது ஏற்படும் மிக நு ண்ணறிவான ஞான அறிவிலே தான் உணர முடியும்.

அறியாமையெனும் கொடிய பிசாசின் கையில் அகப்பட்டு அதன் கூண்டுக்குள்ளே வாழ்கின்றோம். நாம் ஆன்மீக அறிவை வளர்ப்பதனால் இந்த கொடிய பிசாசிடமிருந்து விடுதலை கிடைக்கும். நமது மனதுக்குள்ளே குரோதத்தை வளர்ப்பது அறியாமை எனும் பிசாசே இந்த

பிசாசுடன் நட்புக் கொண்டு நமது மானிட பிறப்புக்குரிய காரணத்தை அறியாமல் எத்தனை காலம் வாழப் போகின்றோம். நமது இளைய தலைமுறையினரையும் இதோ வழியில் வாழ விடுவதா?

எல்லா உயிரிலும் இறைவன் இருப்பதை உணர்ந்தவர்கள் ஞானிகள்! இதை அறிந்த பின் உலக நன்மைக்காக தமக்கென எதையும் செய்யாமல் உலக மக்களுக்கு ஆக சேவை புரிந்தவர்களே மகான்கள். மகான்கள் உலகிற்கு தந்த செய்திகளில் மாசற்ற அன்பே உயர்வுக்கு வழி என்பதை ஆணித்தரமாக போதித்தார்கள். இவற்றை நாம் ஏன் மறந்தோம்? சிந்திப்போம். மாயத் தோற்றங்களுக்கு மாலை மோடாமல் அதனிலிருந்து எம்மை விடுவித்து கொள்வோம்.

மதத்தின் உண்மைகளை பொதுமக்கள் அறிய முடியாதபடி இருட்டடிப்பு நடைபெற்ற காலங்களில் மாயைகளில் இருந்து அனைவரையும் விடுவிக்கலாம். மாயத் தோற்றங்களுக்கு மாலை போடாமல் அவற்றை முறியடித்து யேசுநாதர், புத்தபெருமான், முகமது, ராம கிருஷ்ணர் மற்றும் வீரத்தோடு மட்டுமல்லாது விவேகத்தோடும் எல்லா மதமும் இறைவனை அடையும் வழியை நோக்கித்தான் போய்க் கொண்டு இருக்கின்றது என்பதையும் அத்தோடு இந்து மதத்தின் பெருமைகளை உலகறிய செய்த ஞானச்சுடர் சுவாமி விவேகானந்தர் மற்றும் பல மகான்கள் எல்லோரும் பல இன்னல்களுக்கு மத்தியில் தான் வாழ்ந்து காட்டினார்கள். இவர்களின் வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் நாம் உதாசீனம் செய்து தற்காலிக இன்பத்தை நோக்கி போய்க் கொண்டு இருக்கின்றோம். மாயவலையில் சிக்கி தவிக்கும் நாம் நான் என்ற அகங்காரத்தை தூக்கி யெறிந்து விட்டு ஞானம் என்ற கதவுகளை திறந்து அறியாமை என்ற திரையை கிழித்தெறிந்து நிலையான தெய்வீக ஆனந்த இருப்பிடத்தை அடைந்து எப்பொழுதும் அமைதியாக இருப்போம். நிலையான தெய்வீக இருப்பிடமே என்றும் எப்பொழுதும் ஆனந்தத்தையும், அமைதியையும் தரும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்வோம். மாயவலையில் இருந்து விடுபட்டால் இவற்றை நாம் பின் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

விழிப்புடன் உண்மையை புரிந்து கொண்டு உலக சமாதானத்துக்கு ஆகவும் உலக மக்களின் சந்தோசத்துக்கு ஆகவும், எங்கள் நல்ல இதயத்தை மேலும் தூய்மை படுத்திக் கொண்டு வாழ முன் வாருங்கள். நீங்கள் பிறந்த தாய் மண்ணுக்கு பெருமை சேர்க்க விரும்பினால் நீங்கள் அனைவரும் ஒரு நல்ல வழிகாட்டிகளாக மாறுங்கள் அப்பொழுதுதான் உங்களுக்குள் மறைந்து கிடக்கும் தெய்வீகம் வெளிப்படுவதை உணர்வீர்கள்.

# பெருமை மிக்க பெண் இனமே!

உங்களிடம் மறைந்து கிடக்கும் தெய்வீக ஆற்றல்கள் வெளிப்படட்டும். புனிதமான எமது கலை கலாச்சாரத்தின் பெருமைகளை உலகறியச் செய்யுங்கள்.

சகோதரிகளே!

அளப்பரிய தெய்வீக சக்தி உங்களிடம் இருக்கின்றது. அவை வீணாற்றுப் போவதா? நிகழ்காலவாழ்வின் இயக்கமும் எதிர்கால படைப்பும் உங்கள் கையில் தான் இருக்கின்றது. பெண்ணின் பெருமைகளை உலகறிய செய்யுங்கள். தூய அன்பின் மூலம் எதையும் சாதிக்கலாம் என்பதை அனைவரும் உணரும்படி வாழ்ந்து காட்டுங்கள். உங்களை ஆட்டுவிக்கும் மாயத் தோற்றத்தை முறியடித்து தூய அன்னை சாரதா போன்று நல்ல வழிகாட்டிகளாக வாழ்ந்து காட்டுங்கள். தூய உள்ளம் கொண்ட சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

செயல் திறன்மிக்க இளைஞர்களே! நாளைய வழிகாட்டிகளே!

குற்றவாளி கூண்டில் நாளை நிற்பதை விட இன்றே இப்பொழுதே விழித்தெழுவோம். ஒரு நல்ல புத்தகம் திறந்து கொண்டால் மட்டும் போதாது நாமும் நல்ல வழிகாட்டிகளாக உலகுக்கு வாழ்ந்து காட்டுவோம். நீங்கள் முயற்சி செய்தால் என்னை போலல்ல என்னை விட பத்து மடங்கு கூட ஆகலாம் என்று ஆணித்தரமாக கூறினார் ஞானச்சுடர் சுவாமி விவேகானந்தர் உண்மையில் முடியாது யாருக்கு முடியாது? முடியாது என்ற வாக்கியத்தை தலையில் சுமந்து கொள்ளும் சோம்பறிகளால் முடியாது? ஆனால் எம்மால் முடியும் ஏன் என்றால் நாம் செயல்திறன் மிக்க இளைஞர்கள் நாளைய வழிகாட்டிகள். நாம் சோம்போறிகள். ஆனால் நாளைய உலகில் சிறைச்சாலை அதிகரிக்கும். நாம் குற்றவாளி கூண்டில் நிற்பதை விட சுவாமி விவேகானந்தரைப் போல வீர, விவேகமிக்க இளைஞர்களாகவும், நல்ல வழிகாட்டிகளாகவும், வாழ்ந்து காட்டுவோமென இப்புதுவருடத்திலாவது சபதம் எடுப்போம். நம்பிக்கையே ஆன்மீக பாதையில் வெற்றிப்படி செயல்திறன் மிக்க இளைஞர்களே

அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

பெருமைமிக்க தாய்மார்களே! தந்தைமார்களே!!

அன்பும், அனுதாபமும் இல்லாத வீடுகளிலிருந்து தான் எண்பது சதவீத குற்றவாளிகள் உருவாகின்றனர். அன்பைப் பெற்றிராத பிள்ளையொன்றுக்கு அன்பு தொடர்பான அறிவில்லை என்பதை நாம் அனுபவத்தின் மூலம் தான் அறிய முடியும் அன்பைப் பெற்றிராத ஒருவரிடமிருந்து இன்னொருவரால் ஒரு போதும் அன்பை எதிர்பார்க்க முடியாது.

தீயவழிகளில் ஈடுபட்ட அனேகமான பிள்ளைகளின் வாழ்க்கை சோக மயமானது தாய், தந்தையிடமிருந்து புறக்கணிப்புக்கள் சிறுபிள்ளைத்தனமான பிழைகள் விட்டாலும் அவற்றை அன்பால் அணுகாது மிருகத்தனமான வார்த்தைகளால் கண்டிப்பது. பிள்ளைகளை இரு பிரிவுகளாக பிரித்து அவன் நல்லவன் இவன் கெட்டவன் இப்படியான முடிவுகளை எடுப்பது பொழுது போகவில்லையென்றால் அவற்றை விமர்சிப்பது இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தான் ஒரு குற்றவாளி உருவாகின்றான். அதற்கு ஒரு வகையில் நீங்களும் உடந்தையாகின்றீர்கள்.

தாய்மார்களே!

தாய்மை எப்படிப்பட்டது என்பதை நடை முறையில் வாழ்ந்து காட்டியவர் தூய அன்னை சாரதாதேவி உலகத்தை அணைக்கும் பரந்த அன்பு அன்னையிடம் பூரணமாக வெளிப்பட்டது. அன்னையின் அளப்பெரிய அணைப்பில் அனைவரும் சமமே தீய குணமுடையவர்களையும் அன்னை தனது தாயன்பினால் நல்லதொரு வழிகாட்டிகளாக மாற்றினர். அன்னையின் பரந்த அன்பு வேற்றுமைகளைக் கடந்தது. தூய அன்னை சாரதாதேவி தாய்மை எப்படிப்பட்டது என்பதை எமக்கு நிரூபித்துக் காட்டினார் இவற்றையெல்லாம் நாம் மறந்து இன்று எம்பிள்ளை கெட்டவன் அல்லது கெட்டவள் என்று நீங்களே முடிவு எடுத்து விமர்சிப்பதால் என்ன நன்மை அடைந்தீர்கள்? சிறைச்சாலைகள் அதிகரிப்பதை நீங்கள் விரும்புகின்றீர்களா? இல்லை உங்கள் பிள்ளைகள் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கி குற்றவாளி கூண்டில் நிறுத்தி வைத்து வேடிக்கை பார்க்க போகின்றீர்களா? சிந்தியுங்கள் அன்பெனும் ஆயுதத்தை ஏன் எங்கே ஒழித்து வைத்திருக்கிறீர்கள்? அன்பெனும் தாய்மையான ஆயுதத்தால் சாதிக்க முடியாததை வேறு எப்படி சாதிக்க போகின்றீர்கள்? அன்பெனும் தாய்மையான ஆயுதத்தை தடை

செய்தது யார்? உங்களால் அதை எப்படி தடை செய்ய முடிந்தது? தூய்மையான அன்பை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது அதற்கு எல்லைகள் இல்லை ஆகவே எல்லைகள் போடவும் உங்களால் முடியாது. ஆகவே தூய அன்னை சாரதாதேவி போன்று நீங்களும் ஒரு நல்ல வழிகாட்டிகளாக வாழ்ந்து காட்டுங்கள் வாழ்ந்து காட்டுவோம் என சபதமெடுப்போம் நம்பிக்கையே வாழ்க்கையின் முதல் வெற்றிப்படி என்பதை மறந்து விடாதீர்கள்.

தந்தைமார்களே!

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தான் மட்டும் ஒரு நல்ல வழிகாட்டியாக இருப்பதோடு நின்றுவிடாமல் தாயன்பு எடுத்துக் காட்டாத தனது மனைவியான தூய அன்னை சாரதாதேவியையும் நல்ல வழிகாட்டியாக மாற்றி காட்டினார். அவர்களின் தூய்மையான வாழ்க்கையில் உடல் உறவின் வாயிலாக பிள்ளைகள் இல்லை. ஆனால் அவர்களுக்கு எண்ணிக்கையில் அடங்கா ஆன்மீக குழந்தைகள் இருந்தனர், இருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் ஒரு நல்ல வழிகாட்டியாக மாற்றி காட்டியவர் ராம கிருஷ்ணர் அன்பை தான் தனது ஆயுதமாக பயன்படுத்தினரே தவிர அதிகாரத்தை அல்ல அதுபோல் உங்கள் பிள்ளைகளை நிச்சயமாக நாளை நல்ல வழிகாட்டியாக மாற்றலாம். உருவாக்கலாம். நம்புங்கள். தூய்மையான இலட்சியங்கள் தோற்றதாக வரலாறுகள் இல்லை. உலகில் உள்ள சிறைக்கதவுகளை மூடுவதற்கு துணை செய்யுங்கள் அதை விட்டு சிறைக்கதவுகள் என்னும் அதிகரிப்பதற்கு துணைபோகாதீர்கள். நிச்சயமாக உறுதியாக நம்புங்கள் அன்பெனும் தூய்மையான ஆயுதத்தை மட்டும் நிச்சயமாக உங்கள் பிள்ளைகள் நாளை விவேகானந்தரைப் போல் நல்ல வழிகாட்டியாக வருவான். நீங்கள் பிறந்த மண்ணுக்கு மட்டும் மல்லாமல் உங்களுக்கும் பெருமை சேர்த்து தருவான். உறங்கியது போதும் விழித்தெழுங்கள் சிறைக்கதவுகள் நல்லதொரு வாசிகசாலையாகவோ அல்லது ஒரு பாடசாலையாகவோ அல்லது மருத்துவமனையாகவோ மாற்றிக் காட்டுங்கள். அன்பை பிறருக்கு சேவை செய்தலை தெய்வ வழிபாடாக கருதுங்கள். அதுவே மிக உயர்ந்த சாதனையாகும். அனைத்து தந்தையருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இந்து – ஒரு நல்ல இந்துவாகவும்,
கிறிஸ்தவன் – ஒரு நல்ல கிறிஸ்தவனாகவும்,
இஸ்லாம் – ஒரு நல்ல இஸ்லாமாகவும்
பௌத்தன் – ஒரு சிறந்த பௌத்தனாகவும் வாழ்ந்து

காட்டுவோம் என இப்புதுவருடத்திலாவது சபதமெடுப்போம். அன்பின் வழியில் அனைவரையும் ஒன்று சேர்க்கவும். எல்லோரும் ஒன்றாக இணைந்து செயல்படவும். இப்படியாக உலகுக்கு அமைதியையும் அழகையும் அளிப்பது தான் மதம். நதிகள் பெரியதாயினும் சரி, சிறியதாயினும் சரி கடைசியில் கடலை சென்று கலப்பது போல் உலகின் எல்லா மதத்தின் வழிகளும் கடவுளை தான் சென்றடைகின்றன. ஆகவே நாம் எந்த மதத்தை சார்ந்தவர்கள் என்பது முக்கியமில்லை. நாம் நல்லதொரு வழிகாட்டியாக வாழ்ந்துகாட்டி மற்றவர்களையும் அன்பால் நல்ல வழிகாட்டிகளாக மாற்றி அன்பால் எதையும் சாதிக்கலாம் என்பதை நிரூபித்து காட்டுவோம் என இப்புதுவருடத்தில் ஆவது சபதமெடுப்போம். உறங்கியது போதும் விழித்தெழுவோம். மாயத்தோற்றங்களுக்கு இனி மேலும் மாலையிடாமல் நிலையான தெய்வீகப் ஆனந்த இருப்பிடத்தை நோக்கி அனைவரும் முன்னேறுவோம். அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

Note: இப்புதுவருடத்திலாவது இன, மத பேதமின்றி அனைத்து மக்களும் உலக நாடுகள் அனைத்தும் அமைதியும் சாந்தமும் அடையட்டும். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்

சாந்தி! சாந்தி!! சாந்திகி!!!

என்றும் உங்களில் ஒருவரான
சகோதரன் க. பிரகாஷ்

பிரார்த்தனை உதட்டிலிருந்து வரக் கூடாது.
நெஞ்சிலுருந்து வர வேண்டும்.
அது தனக்காக செய்யப்படக்கூடாது.
பிறருக்காக செய்யப்பட வேண்டும்.
ஞானப் பேரொளி சுவாமி விவேகாணந்தர்

## ஆதிசங்கர்

நமது இந்துமதம் கொண்டாடும் ஆச்சாரியார்களுள் காலத்தால் முந்தியவர் ஆதிசங்கர் ஆவார். அவரது அற்புதமான வாழ்வும் அரியவாதங்களுமே நமக்கு சிறந்த வழிகாட்டிகளாகும்.

உதாரணமாக தாயார் மீது அவர் பூண்டிருந்த அளவற்ற அன்பைப் பார்ப்போம். கேரளத்தில் பூர்ண நதிக்கரையில் அமைந்துள்ளது. காலடி என்னும் அழகிய கிராமம். இங்கு வாழ்ந்து வந்த சிவகுருவுக்கும் ஆர்யாம்பாளுக்கும் மகவாக அவதரித்தார் ஆதிசங்கர். அவரது சிறிய வயதிலேயே தந்தை மறைந்து விட்டார். ஒரு நாள் நீராடப் பூர்ணா நதிக்கு சென்ற தாயார் பலவீனத்தில் மயங்கி விழுந்து விட்டார். சங்கரர் நண்பர்களின் உதவியுடன் தாயாரை வீட்டிற்கு தூக்கி வந்து தக்க முதலுதவிகள் செய்தார். ஆற்றில் நீராட முடியவில்லையே என்று தாயார் மனம் வருந்த சங்கரர் நதி தமது வீட்டை ஓடிச் செல்லலாயிற்று. நதியில் நீராடி அன்னை மனம் குளிர்ந்தார்.

சுமார் எட்டு வயதான போது சங்கரருக்கு துறவியில் தீவிர நாட்டம் ஏற்பட்டது. தாயார் அதற்கு சம்மதிக்கவில்லை. தாயாரின் சம்மதமின்றி வீட்டை விட்டுச் செல்ல சங்கரர் விரும்பவில்லை. இந்நிலையில் ஒருநாள் நதியில் நீராடிக் கொண்டிருந்த சங்கரரின் காலை முதலை ஒன்று கவ்விக் கொண்டிருந்தது. மகனின் உயிருக்குப் போராடுவதைக் கரையிலிருந்து ஆர்யாம்பாவால் தாங்க முடியவில்லை. அப்போது சங்கரர் தாயாரிடம் அம்மா நான் துறவியாக நீங்கள் சம்மதித்தால் முதலை என்னை விட்டுவிடுமென்று நினைக்கின்றேன் என்றார். தாயாரும் அதற்கு சம்மதித்தார். உடனே முதலை அவரது காலை விட்டு விட்டது. வீட்டை விட்டு புறப்படு முன்னர் சங்கரிடம் மகனே! எனது இறுதிக்கடனைச் செய்ய நீ வர வேண்டும் என்றார். பொதுவாக

துறவியார் தம்பெற்றோருக்கோ மற்ற உறவினருக்கோ இறுதிக்கடனை செய்வதில்லை. இருப்பினும் சங்கரர் தாயாரின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டார். வீட்டைத் துறந்து சென்ற சங்கரர் நர்மதைக் கரையில் கோவிந்த பகவத் பாதர் என்னும் மகானைச் தரிசித்தார். அவரிடம் தனக்கு சந்நியாசம் தந்தருளும்படி வேண்டினார். சிறுவன சங்கரரின் அற்புதமான அறிவு துறவு மனப்பான்மை இவற்றைக் கண்டு கோவிந்தர் மகிழ்ந்தார். சங்கரருக்கு சந்நியாசம் தந்தார். சில ஆண்டுகளுக்கு பின் சங்கரர் சிருங்கேரியில் இருந்த போது தமது தாயார் மரணப் படுக்கையில் இருப்பதை உணர்ந்தார். காலடிக்கு விரைந்து சென்றார். தாய் மகனைக் கண்டதும் மகிழ்ந்தார். சங்கரர் தாயாருக்கு ஞானத்தைப் புகட்டினார். இதனால் ஆர்யாம்பாள் ஆனந்தமாக இறந்தார். தாயாரின் உடலுக்கான இறுதிக்கடனைச் செய்ய சங்கரர் முயன்றார். துறவி இவ்வாறு செய்யக் கூடாது என்பதால் உற்றார், உறவினர் அனைவரும் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் சென்று விட்டனர். இருப்பினும் சங்கரர் மனம் தளராமல் வீட்டுக் கொல்லைப் புறத்திலேயே தாயாரின் உடலை எரித்தார். என்னே அவரது அன்பு இதேபோல் அவரது கருணையும் அளவற்றது. ஒரு முறை சங்கரர் ஓர் ஏழைப் பெண்மணி வீட்டிற்குப் பிக்ஷைக்குச் சென்றார். பிக்ஷை தருவதற்கு தன்னிடம் ஒன்றும் இல்லாமல் வருந்திய அவள் வீட்டிற்கு ஒரே ஒரு நெல்லிக்கனியை பிக்ஷாபாத்திரத்தில் இட்டாள். வறுமையிலும் அவளது தர்ம சிந்தனையைக் கண்டு சங்கரரின் மனம் உருகியது. மஹாலக்ஷ்மி தங்க நெல்லிக் கனிகளை மழையாகப் பொழிந்து இந்த ஏழ்மையினை நீங்கினாள். கோகர்ணம் என்னும் ஊரில் சங்கரர் இருந்த போது நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தனது மகனுடன் அவரைத் தரிசிக்க வந்தார். அவன் ஊமை கல்வி அறிவற்றவன். அவனை ஆசீர் வதிக்கும்படி அவனது தந்தை சங்கரரிடம் மனமுருக வேண்டினார். கருணையே வடிவான சங்கரர் அவ்வாறே ஆசீர்வதித்தார். உடனே பூரண ஞானம் பெற்று வாய்விட்டு துதித்த அவன் சங்கரரிடம் தன்னைச் சிஷ்யனாக ஏற்கும்படி பிரார்த்தித்தான். சங்கரரும் அதற்கு சம்மதித்து

அவனுக்கு ஹஸ்தாமலகர் எனப் பெயர் சூட்டினார். இது உள்ளங்கை நெல்லிக்கனி என்று பொருள்படும். பிரம்ம ஞானத்தை உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனியைப் போல் தெளிவாகக் கண்டவர் என்பது அதன் அர்த்தமாகும். பல பிறவிகளில் தவம் செய்து பெறக்கூடிய ஞானத்தைக் கண நேரத்தில் ஓர் ஊமைக்கு அளிக்கவில்லை ஆன்மீக ஆற்றல் பெற்றவராக விளங்கினார் சங்கரர்.

கேட்டதைக் கொடுக்கும் கருணை உள்ளம் கொண்ட அவரிடம் ஒரு முறை காபாலிகன் ஒருவன் தனக்கு கீழான சித்திகள் வாய்க்க வேண்டும் என்பதற்காக அவரது தலையைத் தரும்படி கேட்டான். சங்கரரும் மகிழ்ச்சியுடன் அதற்கு சம்மதித்தார். ஆனால் கபாலிகள் அவரது தலையைக் கொய்யாமல் சங்கரது சீடர் பத்மபாதர் தடுத்தார்.

சங்கரர் தம் புண்ணிய பூமியாம் பாரதத்தை தாம் வாழ்ந்த 32 வயதற்குள் மும்முறை வலம் வந்திருக்கின்றார். எவ்வித வாகன வசதியும் இல்லாத அக்காலத்தில் இது மிகப் பெரிய சாதனையாகும். மூகாம்பிகை சிருங்கேரி, காஞ்சி, காசி, கேதார், பத்ரி போன்ற பல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தார். பல பண்டிதர்களுடன் விவாதம் புரிந்து அத்வைத்தின் பெருமையை நிலை நாட்டினார். இதில் அவர் மண்டனமிஸ்ரர் என்பவருடன் நிகழ்த்திய விவாதம் புகழ்பெற்றது. ஏனெனில் இந்த விவாதத்திற்கு நடுவராக இருந்தவர் மண்டன மிஸ்ரரின் மனைவி பாரதி. இவர் சரஸ்வதியின் அம்சமாவார். விவாதத்தில் தோற்பவர் வெல்பவரின் சிஷ்யராக வேண்டும் என்பது நிபந்தனை. அதுபோல் மண்டன மிஸ்ரார் தோற்ற போது தன்னைப்பிரிந்து துறவேற்கும்படி அவரது மனைவி தீர்ப்பளித்தார். சங்கரர் பாரதியை மனமாரப் பாராட்டி ஆசீர்வதித்தார். மண்டனமிஸ்ரர், சுரேஸ்வரர் என்னும் பெயர் சூட்டப்பட்டு துறவியானார். இவ்வாறு விவாதங்களில் வெற்றி பெறுவது அக்கால மக்களுக்கு உண்மை ஞானத்தின் சிறப்பை உணர்த்தும் எக்காலமும் நமது மதம் அழியாதிருக்க சங்கரர் கீதை பிரம்ம சூத்திரம் உபநிஷங்கள் போன்றவற்றிக்கு விளக்கம் எழுதினார். ஆன்மீக வாழ்விற்கு

வழிகாட்டியாக விளங்கும் நூல்களையும் பக்தி ததும்பும் ஸ்தோத்திரங்களையும் இயற்றினார். இவை என்றும் நின்று நிலவும் வண்ணம் தம்பாரதத்தின் தெற்கே சிருங்கேரியிலும், கிழக்கே பூரியிலும் மடங்களை நிறுவி தமது சீடர்களை அவற்றின் தலைவர்களாக நியமித்தார்.

நமது வேதத்தின் அடிப்படையிலான அத்வைதத்தை தத்துவத்தை சங்கரர் தெளிவாக கூறியவராவார் அன்று வேதாந்தம் என்றாலே அத்வைதம் என்று கருதும்படி அத் தத்துவம் வேதாந்தத்தோடு ஒன்றி இருக்கின்றது. அத்வைதம் பலர் எண்ணுவது போல் வறட்டு வாதமல்ல என்பதற்கு சங்கரது வாழ்வும் வாக்கும் சிறந்த சான்றாகும். உலக நிலையில் பெரும் தாயன்பு படைத்தவராகவும் கருணை உள்ளம் கொண்டவராகவும் விளங்கினார் என்பதை நாம் சுருக்கமாக பார்த்தோம். அவரது நூல்களில் சிறந்த பக்திச்சுவை ததும்புபவையாகவும் அவர் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டதுடனும் சில இடங்களில் ஸ்ரீ சக்கரம், மூர்த்தி பிரதிஷ்டை இவற்றை செய்துள்ளார். குறுகிய காலத்தில் பல இனிய செயல்களைச் செய்த அவர் சிறந்த கர்ம யோகி பக்தராக விளங்கினார் என்பது புலனாகிறது. அவரைப் போல் நற்செயல்கள் செய்து பக்தியுடன் வாழ்ந்து அவர் அடைந்த பிரம்ம ஞானத்தை அடைய முயல்வோம்.

திரு தனுஷ்கோடி
இந்தியா
(மாத்ருவாணி என்ற நூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது).

தாமரை இலை போல் மனிதன் இந்த உலகில் வாழ வேண்டும். அது நீரிலேயே இருந்தாலும் நீரால் நனைக்கப்படுவதில்லை. மனிதனும் அவ்வாறே இந்த உலகில் பற்று எதுவும் இல்லாமல் உடல் உலகிலும் உள்ளம் இறைவனிடமுமாக வாழ வேண்டும்.

ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தர்

# பிள்ளையார்

சகல உலகங்களுக்கும் தாய் தந்தையான பார்வதி பரமேஸ்வரனின் மூத்தபிள்ளை பிள்ளையார் வேத முதல் சொல்லான ஓம் எனும் பிரணவ வடிவினரே பிள்ளையார். பிள்ளையாருக்கு கணபதி விக்னேஸ்வரன், விநாயகர் எனப் பல பெயர் உண்டு எல்லாவற்றுக்கும் தலைவர் பிள்ளையார் விக்கினங்களை நீக்குபவர் பிள்ளையார் எந்த காரியத்திற்கும் தடை வராமல் இருப்பதற்கு பிள்ளையாரை வழிபட்டே தொடங்குவார்கள்.

பிள்ளையாரை தேகபலம், அழகு, புத்திகூர்மை, ஆனந்தம், கல்வி சகல செளபாக்கியங்களும் விரைவில் தருவார் திங்கள் வெள்ளிக்கிழமைகளிலும் ஆவணிமாத வளர்பிறை சதுர்த்தி மார்கழி மாதம் சதயம் பிள்ளையாருக்குரிய விரதங்கள் முக்கனி மோதகம், சத்துணவுகள் பிள்ளையாருக்குரிய பிரசாதம் மகாபாரதக்கதையை மாமுனிவர் வேதவியாசர் கூற பிள்ளையார் எழுதினார். ஔவையார் வழிபட்டு எல்லாவித சக்திகளையும் பெற்றர். நாமும் பிள்ளையாரை வழிபட்டு அனைத்தையும் பெறுவோம்.

குணமணி அம்மா
வோல்தம்ஸ்ரோ


# World Star

அந்தனீஸ் தமிழ் களஞ்சியம்
இலங்கை, இந்திய, ஆங்கில
உணவுப் பொருட்கள்
Audio & CD
Video Filming, Photography

**368A1, Hoe Street**
**Walthamstow**
**London E17 9AA**

Tel: 0181 520 3502
Fax: 0181 520 8468



# ஸ்ரீ ராம கிருஷ்ணர்

கமார்புகூர் ஓர் அழகான கிராமம். இக்கிராமம் கல்கத்தா நகரத்திற்கு சுமார் எழுபது மைல் தொலைவில் அமைந்துள்ளது. இங்கே பக்தி நிரம்பிய அந்தணர் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. கணவர் பெயர் சுதிராம் என்பது மனைவி சந்திரமணிதேவி அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் நேர்மையும் நாணயமும் கொண்டவர் களாக திகழ்ந்தனர்.கிடைத்ததை வைத்து மன நிறைவுடன் வாழ்ந்தனர். அவர்களுக்கு ராம்குமார், ராமேசுவரர் என்ற இரு பையன்களும் காத்யாயனி என்ற பெண்ணு ம் பிறந்தனர்.சுதிராமிற்கு தம்முடைய அறுபதா வது வயதில் கயா என்னும் புண்ணியத்தலத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு கோயில் கொண்டிருக்கும் விஷ்ணு பகவா னைத் தரிசனம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. அதன்படி கயாவிற்குச்சென்று அன்றாடம் திருமாலை வழிபட்டு வந்தார். ஒரு நாள் இரவு இறைவனை வணங்கிவிட்டுப் படுத்துக் கொண்டார்.

அப்பொழுது அற்புதமான கனவொன்று கண்டார். சுதாதரர் என்ற பெயர் கொண்ட திருமால் அவருடைய கனவில் எழுந்தருளினார் அன்பனே! உன்னுடைய பக்தியை கண்டு மெச்சினோம். விரைவிலேயே உனக்கு நாம் மகனாக வந்து பிறப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினார் இறைவனைக் கண்டு மகிழ்ந்த சுதிராம் ஐயனே! நானே பரம ஏழை நீங்கள் வந்து பிறப்பதற்கு என்னுடைய வீடு அருகதையற்றது. உமக்கு ஒரு வேளை சோறு போடக்கூட எனக்கு சக்தி இல்லையே? நான் என்ன செய்வேன்? என்று வருத்தத்துடன் கூறினார் புன்னகை புரிந்த பகவான பக்தனே! வருந்தாதே! நீ எதை அளித்தாலும் அதை ஆர்வத்துடன் ஏற்று மகிழ்வேன் என்று கூறியருளினார்.

அதே சமயத்தில் கமார்பு கூரில் வினோதமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ஒரு நாள் சந்திரமணி தேவி வீட்டிற்கு அருகில் உள்ள சிவன் கோயிலில் சிவலிங்கத்தை வணங்கி வழிபட்டு கொண்டிருந்தார். அந்நேரம்

சிவலிங்கத்திலிருந்து ஒரு சோதி எழுந்து கோவில் முழுவதையும் ஒளி வெள்ளத்தில் ஆழ்த்திற்று. பிறகு அது மெதுவாக கிளம்பி சந்திரமணி தேவியைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டது. அவர் மயக்க முற்று கீழே விழுந்தார். தன்னினைவு பெற்ற போது தாம் கருத்துக் கொண்டிருப்பதாக உணர்ந்து திகைத்தார். சில நாட்கள் கயாவில் அமைதியாகக் கழித்து விட்டுச் சுதிராம் கிராமத்திற்கு திரும்பினார்.

தமக்கு ஏற்பட்ட தெய்வீக அனுபவத்தைச் சந்திரமணிதேவி கணவரிம் விளக்கமாக எடுத்துரைத்த பொழுது சுதிராம் உன் அனுபவம் உண்மையானதே என் கனவிலும் கதாதரப் பெருமான் எழுந்தருளி தம் மகளாக தாம் வந்து பிறக்கப் போவதாகக் கூறினார். நீ கவலையுற வேண்டாம் என்று கூறி மனைவியைத் தேற்றினார். அதன்படி 1836 ஆம் ஆண்டு பெப்றவரி மாதம் 28ம் திகதி விடியற் காலையில் சந்திரமணிதேவி ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார் இறைவன் தசரத சக்கிரவர்த்திக்கும் கௌசல்யா தேவிக்கும் ஸ்ரீ ராமனாகப் பிறந்தார் தேவகி வாசுதேவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணராக பிறந்தார். சுதிராம் சந்திரமணி தம்பதிகளுக்கோ ஸ்ரீ ராம கிருஷ்ணராக வந்து பிறந்தார் குழந்தை உருண்டு, திரண்டு பொலிவுடன் விளங்கிற்று. உலகமக்கள் கடவுளை மறந்து தீய வழிகளில் சென்று அல்லற்படும் போது இறைவன் பக்தர்களை காப்பாற்ற வேண்டி மனிதனாகப் பிறக்கின்றான் இதையே நாம் அவதாரம் என்று அழைக்கின்றோம். மனித குலத்தை உய்விக்க வேண்டியபகவான் ஸ்ரீ ராம கிருஷ்ணராக வந்து பிறந்தார். கயாவில் கோயில் கொண்டிருக்கும் கதாதரப் பெருமான் தம் கனவில் தோன்றி கூறியதை நினைவு கூர்ந்த சுதிராம் அவர் அருளால் பிறந்த குழந்தைக்கு அவருடைய திருநாமம் ஆன கதாகரன் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்.

இன்னும் வளரும்.............

**இறைவனுக்கு நீ கொடுக்கின்ற ஒவ்வொன்றும் பன்மடங்காக உன்னிடம் திரும்பி வரும். எனவே மோசமான தீய எதையும் இறைவனிடம் சமர்ப்பிக்காதே**

**ராமகிருஷ்ணர்**

# கேள்வி பதில் போட்டி

இளைய தலைமுறையினரை நோக்கியே இக்கேள்வி தொடுக்கப்படுகின்றது. சரியான விடைகளை எழுதி அனுப்பும் அன்பு மிக்க ஆன்மீக நெஞ்சங்களுக்கு குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படும்.

1. ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையை மையமாக வைத்து அதில் இருந்து இளைய தலைமுறையினர் கற்க வேண்டிய பாடம் என்ன?

அன்புமிக்க ஆன்மீக நெஞ்சங்கள் அனைவரிடமும் பொதுவாக இக்கேள்வியை தொடுக்கின்றோம்.
தெரிவுசெய்யப்படும். கவிதைகள் (குலுக்கல் முறையில் 1ம், 2ம், 3ம் பரிசுகள் வழங்கப்படும்)

2. ஆன்மீக வலம் என்னும் இந்த இதழின் அட்டைப்படத்தை அனைவரும் உன்னிப்பாக கவனியுங்கள். உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை கைவண்ணத்தில் காட்டுங்கள்.

குறிப்பு: நீங்கள் விரும்பினால் எமது முகவரியிலேயே அல்லது தபால் மூலமாகவோ பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஆன்மீகவலம் என்னும் இவ்விதழை தபால் மூலம் பெற விரும்புவர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளலாம்.

என்றும் அன்புக்கும் ஆதரவுக்கும் கட்டுப்பட்ட

க. பிரகாஷ்

## கன்னியாகுமரி பற்றிய வரலாறு:

கன்னியாகுமரி என்ற பெயரை கேட்ட மாத்திரத்திலேயே பார்வதி தேவியானவள் சிவபெருமானின் கைத்தலம் பற்றாகக் கனாக் கண்டு கன்னியாக நின்று கடும் தவம் புரிந்த காட்சியே நம் கண்களின் முன்னால் வருகிறது! காலம் காலமாக கன்னியாகுமரியின் நடுவே நிற்கும் பாறையின் மேல் காணும் தேவியின் ஒற்றைக்கால் தடத்தை ஸ்ரீ பாதம் என்று கூறி மக்கள் வணங்கி வந்துள்ளனர். தேவி கன்னியாகுமரியின் ஆலயம் முதலில் ஸ்ரீ பாத பாறையின் மேல் தான் இருந்தது ஆகவும் கால வெள்ளத்தில் கடல் அரிப்பினால் அக்கோயில் கைவிடப்பட்டு ஒரு புதிய கோயில் கடற்கரையில் எழுந்தது ஆகவும் இங்கு வாழும் மக்கள் நம்புகின்றனர்.

புராணங்களும் செவிவழிச் செய்திகளும் கன்னியாகுமரிக்கு எவ்வளவு புனித தன்மையை அளித்து வந்துள்ளன. முனிவர்களும் மகான்களும் இங்கு பரந்தளவில் நிற்கும் எழில் மிக்க குன்றுகளிலும் நந்தவனங்களிலும் சஞ்சாரம் செய்தனர். சுனைகளிலும் முக்கடல் சந்திப்பிலும் நீராடினர். தவம் புரிந்து மனப்பரிபாகம் பெற்றனர் என்பது பற்றி பலவேறு கதைகள் வழக்கில் உள்ளன. திரேதயுகத்தில் ராமன் சீதையை மீட்க வேண்டி இராவணனுடன் இலங்கையில் போர்புரியுங்கால் அடிபட்டு விழுந்த இலட்சுமனை மூர்ச்சையிலிருந்து தெளிவிக்க சஞ்சீவினி மலையை, அனுமன் தூக்கி செல்கையில் அதன் ஒரு பாகம் கன்னியாகுமரியில் விழுந்தது. ஆக நம்பப்படுகின்றது. இதன்அடிப்படையில் தான் இங்குள்ள மருத்துவமலை போன்ற சில குன்றுகளில் அநேகவித அபூர்வ மூலிகைகள் கிடைக்கின்றன போலும் தவசிரேஷ்டரும் மருத்துவருமான அகஸ்தூய மாமுனிவர் கன்னியாகுமரியில் பரந்தளாவி நிற்கும் மலைக்குன்றுகளில் அபூர்வ மூலிகைக்கென அலைந்து திரிந்து கடைசியில் அகஸ்திய கூடத்தில் தங்கி இன்னும் வாழ்ந்து வருவதாக சொல்லப்படுகூன்றது.

அண்மைக் கால கட்டத்தில் காளிதேவியின் பால அபாரபக்தி கொண்ட சுவாமி விவேகானந்தர் கன்னியாகுமரி

கடற்கரைக்கு மற்றும் ஒருவித தவம் புரிய வந்தார். இத்தவம் எத்தகையது? தம் நாட்டுமக்கள் அறியாமை மற்றும் வறுமை பிடிகளிலிருந்து எங்ஙனம் விடுவிப்பது என்ற பிரச்சனைக்கு தீர்வுகாணவே அவர் இத்தவத்தை மேற் கொண்டார். இத்தவத்தின் பொருட்டு கடல் நடுவில் உள்ள ஸ்ரீ பாத பாறைக்கு செல்ல எண்ணிய சுவாமி விவேகானந்தர் தன்கையில் படகுப்பணம் கொடுக்கவும் காசில்லாத நிலையில் சுறா மீன்கள் அடங்கிய சூழ் கடலில் 550 கஜ தூரம் நீந்திக்கடந்தார் என்று சொல்லப்படுகிறது.

முதலில் அவருடைய இம்முயற்சி அங்குள்ள பார்வையாளர்களிடையே பரிகாசத்தையே தோற்றுவித்தது. ஆனால் சுவாஜி எதிர் நீச்சல் போட்டு முன்னேறுவதை கண்ட மக்கள் ஆச்சரியத்தினால் திகைத்து விட்டனர். கடைசியில் சிலர் இளநீர் காய்களுடனும், வாழைப்பழங்களுடனும் ஒரு படகில் சென்று சுவாமிக்கு உணவு அளிக்கவும் முன் வந்தனர். ஆனால் சுவாமிஜியோ இவைகளை ஏற்றுக் கொள்ளாமல் மிகப்பணிவுடன் அவர்களுடன் தன்னை அமைதியுடன் அங்கு விட்டு செல்லுமாறு வேண்டினர். அங்கு ஸ்ரீ பாதப் பாறையில் மூன்று நீண்ட நாட்களும் இரவுகளும் சூழ்ந்த தியானத்தில் அமர்ந்து தவம் புரிந்தார். கடைசியில் மனித குலத்துக்கு சேவை புரிவதன் மூலமே கடவுளின் கருணைக்கு பாத்திரமாக முடியும் என்ற அரிய உபநிடதக் கருத்து பற்றிய ஞானோதேயம் சுவாமிக்கு கிட்டியது. இந்திய தேசம் மகோன்னத நிலையில் இருந்து இத்தாழ்ந்த ஏன் வர நேர்ந்தது இத் தேசத்தை எங்ஙனம் அதன் பழைய உன்னத நிலைக்கு உயர்த்த முடியும் என்பதைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி கடைசியில் அதை தியாக உணர்வாலும் தன்னலமற்ற சேவை மூலமே அடைய முடியும் என்ற பேருண்மையை கண்டறிந்தார்.

தொடர்ந்து வளரும்........

தன்னை வெறுக்கத் தொடங்கியவனுக்கு கீழ் நிலைக்கு இழுத்துச் செல்லும் கதவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஞானப் பேரொளி சுவாமி விவேகானந்தர்

# பகவத்கீதையும் தியானமும்

இந்த உலகமும் இதில் உள்ளவையும் இதில் உள்ளவர்களும் ஒரு மகத்தான பரம சத்தியின் கருணையினால் தோன்றி இயங்கி வருபவர்களே. இந்த பரம சத்திக்கும் ஆதி சத்திக்கும் எத்தனையோ பெயர்களைச் சூட்டி ஒவ்வொரு சமயத்தாரும் குறிப்பிட்டாலும் இது ஒன்றாகத் தானிருக்கின்றது.

உலகின் இயக்கம் எல்லாம் இந்த பரமசத்தியின் சித்தத்தின் படிதான் நடந்து வருகிறது. இது மட்டு மல்ல அந்த பரம சத்தியின் அம்சமாகவே அனைத்தும் அமைந்து விளங்கின்றன. இந்த உண்மையை உணர்ந்து விட்டால் இந்த உணர்வோடு எண்ணங்களையும், செயல்களையும் ஒழுங்குபடுத்திக் கொண்டால் உலக வாழ்விலும் எந்தவிதச் சலனமும் ஏற்படாது.

இயற்கை உணர்வுகள் எல்லாம் உயிர்வகைகளையும் இயக்கி வருகின்றன. இந்த உணர்வுகளோடு செயல்பட்டு அவை வாழ்ந்து வருகின்றன. காலகாலமாகத் தொடர்ந்து வரும் வாழ்வு போக்கையும் அவை அப்படியே தொடர்ந்து வருகின்றன.

ஒரு புலி ஆட்டையோ மானையோ பார்க்கும் போது தனக்கு உணவாகும் என்று தான் நினைக்கின்றது. அதுவும் தன்னைப் போல் ஒரு ஜீவன் என்னும் எண்ணம் அந்தப் புலிக்கு உண்டாகுவதில்லை. தன் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளவும் அது நினைப்பதில்லை. அப்படி மாற்றுவதை அதன் உடலமைப்பும் ஏற்றுக் கொள்ளாது.

மனிதனின் நிலை பிற உயிரினங்களின் நிலையைவிட தனிமையானது. மனிதனுக்கு சிந்திக்கும் அறிவு நிரம்ப

இருக்கின்றது. இயற்கை பொருள்களையும் சத்திகளையும் கட்டுப்படுத்தி தன்னுடைய சுக வாழ்வுக்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ளுவதும் புத்திக் கூர்மையும் இருக்கின்றது.

இயற்கையாக உடலோடு பொருந்தி எழும் உணர்வுகளுடன் மனிதனின் அறிவு விருத்தியினாலே எழுகின்ற உணர்வுகளும் சேர்ந்து தான் மனித வாழ்வை வடிவமைக்கின்றன. இந்த செயற்கையான வாழக்கையினிலே தான் மனிதன் பலவிதமான சலனங்களுக்கும் உள்ளாகின்றான். இந்த சலனங்கள் மனிதனுக்குப் பல துன்பங்களையும் இங்கே தான் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு உயிருக்கும் என்று விதிக்கப்பட்ட கடமை- களைச் செய்து கொண்டு அந்தக் கடமைகளின் பலன்களைப்பற்றி கவலைப்படாமல் அதற்குத்தானே காரணம் என்று நினைத்து மயங்காமல் எல்லாம் இறைவன் சித்தம் என்று நிம்மதியாக வாழ்பவனுக்கு இந்த உலகிலும் பெரிதும் இல்லாமல் போய்விடுகின்றது.

வேண்டுதல் வேண்டாமை என்பதும் அற்றுப் போய்விடுகின்றது. எங்கும் எதிலும் பரமசத்தியை காணும் சமவுணர்வையும் மனிதன் பெற்று விடுகின்றான். அகங்காரமும் ஆசாபாசமும் அறவே நீங்கியவனாக விடுகின்றான். தன்னை அறிந்து தன்னிலேயுள்ள தலைவனையும் தெரிந்து தெய்வத் தன்மைக்கும் உயர்ந்து விடுகின்றான்.

ஞானத்தால் தன்னை ஒழுக்கப்படுத்திக் கொண்டு மனிதன் இந்த உயர் நிலை வாழ்வை நடத்தி வரலாம். ஞானத்தை இருள்படிய விட்டு,விட்டு உலகவிச்சைகளிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அதனால் வரும் சிக்கல்களையும் வளர்த்துக் கொள்ளலாம்.

இந்த உண்மையை உணர வைத்து மனிதனை மெய்யுணர்வு நெறியிலே நிலைத்து நிற்பதற்கு வழி காட்டுவது தான் பகவத் கீதை. பவத கீதையை உயரிய ஞான நூல் என்று போற்றுவதும் இதனால்தான்.

சாந்தி நிலையிலே மனிதனுக்கு எல்லாத் துன்பங்களுமே அழிகின்றன. சித்தம் சாந்தி பெற்ற பின் நிலைப்படுகின்றது. யோகப் இல்லாதவனுக்கு புத்தியில்லை. மனோபாவனையும் இல்லை மனோபாவனை இல்லாதவனுக்கு சாந்தியில்லை. சாந்தி இல்லாதவனுக்கு இன்பமும் இல்லை. இது கீதையின் கருத்தாகும்.

எவன் இந்திரியங்களை மனதால் கட்டுப்படுத்திக்கொண்டு கர்மேந்திரியங்களால் கர்மயோகம் பண்ணுகின்றானோ அவனே சிறந்தவன்.என்பான். கீ தா சார்யன் எனவே அவரவர் தத்தம் கடமைகளைச் செய்வதில் தயக்கம் காட்டுவது கூடாது. உரிய செயல்களைச் செய்வது தர்மம். இவ்வாறு கர்மயோகம் முதலில் வலியுறுத்தப் பெறுகின்றது.

கர்மம் எல்லாம் முற்றிலும் ஞானத்தில் முடிவு பெறுகின்றது. இதனால் ஞானவேள்வி சிறப்பானதாகின்றது யோகத்தால் செயற்கைகளை துறந்து ஞானத்தால் ஐயத்தை அறுத்துச் தன்னைத்தான் ஆள்வோனைக் கர்மங்கள் கட்டுப்படுத்துவது இல்லை.

மனம் சம நிலையில் நின்றால் உலகத்திலேயே இயற்கையை வென்றவராவார். பரம் பொருள் மாசற்றது. சமநிலை பெற்றது. ஆதலால் இவர்களும் பரம் பொருளின் தன்மையை அடைகின்றனர். சந்நியாச யோகத்தில் இதனை வலியுறுத்திய கீதாசார்யன் ஆறாம் அத்தியாயத்தில் தியான யோகம் பற்றியும் விளக்கின்றான்

இன்னும் வளரும்.........

# BARATHY VILLASS

**SRI LANKAN & SOUTH INDIAN**

**RESTAURANT & TAKE - AWAY**

**ORDERS TAKEN( free delivery )**
**PARTIES WELCOME UP TO 30**
***SEATS***



**Wedding**




**Other Occasion**




**Birthday**

***Eat in - NO service charge**

## TAKE-AWAY OFFERS !!

***One FREE pack of snack ( £1.30 ) for every £10 you spend .**

***Any 5 MEALS just cost you only £15.**

***WEEKLY MEAL only £20 ( eat in or take away )**

***FREE DELIVERY for orders more than £50 around Walthamstow Area.**

**134, HOE STREET,**
**WALTHAMSTOW,**
**LONDON, E17 4QR.**

**TEL : 0181 521 3011**

**Business Hours**

**Sun To Thur**
**12.00 Noon - 12.00 Midnight**
**Fri & Sat**
**12.00 Noon - 1.00 Latenight**

# JR Print

*தரம் *மலிவு *வேகம்

இவற்றிற்கு **ஜே ஆர் அச்சகம்**

எம்மிடம் 500 இற்கும் மேற்பட்ட அழகிய வண்ண வண்ண திருமண அழைப்பிதழ்கள், பிறந்த நாள் வாழ்த்து அழைப்பிதழ்கள் மற்றும் திருமணத்திற்குத் தேவையான Cake Boxes, Short eat Bags பொலீத்தீன் பைகள், தலைப்பாகை Rich Cake அனைத்தும் ஒரே இடத்தில்பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## JR Print

அதுமட்டுமா,

*Letter Heads *Book lets *Invoices

*Receipt Pads *Souvenirs

*Visiting Cards *Raffle Tickets

*Menu Cards *Leaflets *Labels

*Fax *Rubber stamps etc........

**Tel: 0181 503 6643**

**Fax: 0181 923 6643**

57 Boundary Road
Walthamstow
London E17 8NQ

வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கப்படும்

KUMARANS குமரன்ஸ்

NEWSAGENT - OFF LICENCE & GROCERY

**KUMARANS**
142-144 Hoe St
Walthamstow
London E17 4QR
Tel: 0181 521 4955
Fax: 0181 521 9482

**KUMARANS**
69 Holloway Road
Highbury & Islington
London N7 8JZ
Tel: 0171 609 1912
Fax: 0171 609 0501

**KUMARANS**
532-536 Forest Rd
Walthamstow
London E17 4NB
Tel: 0181 925 7720
Fax: 0181 925 7721

IR MOBILE COMMUNICATIONS
FOR ALL YOUR MOBILE PHONE NEEDS

**Orange** **Cellnet**

CONTACT: INDRAN
0181 503 7388 or
0370 426 577

*Cases *Charges
*Batteries *Aerials

**One 2 One** **Vodafone**

Our Promise
WE WILL BEAT ANY PRICE
98 Queens Road London E17 8QP
Tel/Fax: 0181 503 7388
Mobile:0370 426 577

# Geeta Sarees




SPECIALISTS IN Wedding Sarees Printed Sarees Woollen Shawls Jewellery etc..

*Exclusive & Elegant*

**231 UPPER TOOTING ROAD**
**LONDON SW17**
(Nearest Tube : Tooting Broadway)
**Tel : 0181 672 0208**



அச்சுப் பதிப்பு: ஜே.ஆர்.அச்சகம் 0181 503 6643